


"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"

**சுவடி : 3** **ஏடு : 13**

**மே-சூன் 2024**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

**சன் நகலகம்**

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

*

**மின்னஞ்சல் :**

puthiyasinthanaiyalanmagazine@gmail.com

**இணையத்தில் படிக்க**

www.keetru.com


**ஆசிரியவுரை**

# 2024 பொதுத் தேர்தல் முடிவுகள் இந்துத்துவ பாசிசத்திற்கு ஏற்பட்டுள்ள தற்காலிகத் தடை!

## இனி நாம் செய்ய வேண்டியது என்ன?

2024 சூன் 04 அன்று 18ஆம் நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. '400 இடங்களுக்குமேல் வெல்வோம்' என்று முழங்கி வந்த பாரதிய சனதா கட்சி 240 இடங்களை மட்டுமே பெற்றது. கூட்டணிக் கட்சிகளுடன் சேர்ந்து தான் ஆட்சி அமைக்க முடியும் என்கிற நிலைக்குத் தள்ளப்பட்டது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு இடங்களுடனான பெரும்பான்மையுடன் பா.ச.க. வெற்றி பெற்றால் இந்திய அரசமைப்புச் சட்டம் அடியோடு மாற்றப்பட்டு, இந்து ராஷ்டிரம் நிறுவப்படும்; மொழிவழி மாநிலங்கள் ஒழிக்கப்பட்டு ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே கட்சி, ஒரே தலைவர் என்கிற நிலை ஏற்படும்; சனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப் படும் என்று எதிர்க்கட்சிகளாலும் சனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட இயக்கங்களாலும் வெகுமக்களாலும் அஞ்சப்பட்டது. பா.ச.க. மக்களவையில் தனிப் பெரும்பான்மைக்குரிய 272 இடங்களைக்கூட எட்டாததால் இந்த அச்சம் தற்காலிகமாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.

சனநாயகத்தில் மய்யமானவர்கள் மக்களே அல்லவா? நரேந்திர மோடி என்ற ஒற்றை மனிதரையே வழிபடத்தக்க மூலவராக முன்னிறுத்தியது பா.ச.க. அவர் ஒருவரே அக்கட்சியின் தேர்தல் பரப்புரையாளராகத் தேர்தல் களத்தில் சுற்றி சுற்றி வந்தார். தமிழ்நாட்டுக்கு எட்டு முறை வந்தார். மோடியால் உருவாக்கிப் பரப்பப்பட்ட 400 தொகுதிகளில் வெற்றி என்ற மந்திரத்தையே ஊடகங்கள் பின்பாட்டுப் பாடின. தேர்தலுக்குப் பிந்திய கருத்துக் கணிப்பு என ஊடகங்கள் அதையே உச்சாடனம் செய்தன. 04.06.2024 அன்று வெளியான மக்கள் தீர்ப்பு அவர்களுக்கெல்லாம் அதிர்ச்சியாக இருக்கலாம். பாசிச பா.ச.க.வுக்கு எதிராக முற்போக்கு இயக்கங்கள் அனைத்தும் அணிதிரண்டு நின்ற தமிழ்நாட்டில் 40 இடங்களிலும் தி.மு.க. தலைமையிலான இண்டியா கூட்டணியின் வெற்றி நாம் கொண்டாடத் தக்கதாகும். இந்திய அளவில் காங்கிரசும் பெரும்பாலான மாநிலங்களில் மாநிலக் கட்சிகளும் புத்தெழுச்சிப் பெற்று ஈட்டியுள்ள வெற்றி கூட்டாட்சி முறைமைக்கு வலுசேர்ப்பதாகும்.

இண்டியா கூட்டணியின் தேர்தல் வாக்குறுதிகளாக சமூக நீதி, சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி, கல்வியிலும் அரசுப் பணி களிலும் மக்கள் தொகை விகிதாசாரப்படி இடஒதுக்கீடு அளிக்கப்படும், இடஒதுக்கீடு வழங்க 50 விழுக்காடு உச்சவரம்பு அகற்றப்படும் என அறிவித்ததும் மோடியின் எதேச்சாதிகார-சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக அரசமைப்புச் சட்டத்தின்படியான சனநாயக ஆட்சியை மீட்டெடுப்போம் என காங்கிரசுக் கட்சித் தலைவர் இராகுல் காந்தி எதிர்க்குரல் எழுப்பியதும் பா.ச.க.விற்குச் சரிவு ஏற்படுத்திய மக்கள் தீர்ப்புக்கு முதன்மை காரணி யாகும். வெகுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ள

பணவீக்கம், பண்டங்களின் விலை உயர்வு, வேலை வாய்ப்பின்மை என எதைப் பற்றியும் மோடி பரப்புரையில் வாய்திறக்கவே இல்லை என்பதும் பா.ச.க.வின் சரிவுக்குக் காரணம் ஆகும்.

இந்த நிலையிலும் பா.ச.க. தனித்து ஆட்சி அமைப்ப தற்குரிய 272 இடங்கள் பெறமுடியாவிட்டாலும் 240 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சி என்றாகியுள்ளது. பா.ச.க. தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளான தெலுங்குதேசம் 16 இடங்கள், அய்க்கிய ஜனதா தளம் 12 இடங்கள், ஷிண்டே தலைமையிலான சிவசேனா 7, லோக் ஜனசக்தி 5 என மொத்தம் 293 இடங்களைப் பெற்றுள்ளதால் நரேந்திர மோடி தலைமையில் 3ஆம் முறையாக ஆட்சியதிகார பீடத்தில் அமரும் வாய்ப்பைப் பெற்றுவிட்டது.

இண்டியா கூட்டணியும் காங்கிரசுக் கட்சியும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமவாய்ப்புகள் அளிக்கப்பட ஆவன செய்வோம் என்றும் மக்களின் அன்றாடச் சிக்கல்களுக் கானத் தீர்வுகளை முன்வைத்தும் பா.ச.க. ஆட்சியில் சனநாயக நடைமுறைகள் அரிக்கப்பட்டதையும் பன்மைத்துவத்திற்கு எதிராக மக்களைப் பிளவுபடுத்தியப் போக்கினை எடுத்துக் காட்டியும் பா.ச.க. மோடியின் கூட்டாளிகளான பெருமுதலாளிகளுக்கு நாட்டின் வளங்களை ஏகபோகமாக்கிவிட்டதை அம்பலப்படுத்தியும் பரப்புரை செய்தனர். ஆனாலும் காங்கிரசுக் கட்சி 99 இடங்களையும் காங்கிரசு உள்ளிட்ட இண்டியா கூட்டணி 234 இடங்களைத்தான் பெற முடிந்தது. ஆட்சியமைத்திட மேலும் 38 இடங்கள் தேவை என்ற நிலையில் வலிமையான எதிர்க்கட்சியாக இயங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

பா.ச.க. மோடியின் அதிகார முறைகேடுகளும் தரங் கெட்ட பரப்புரையும் கயமைப் போக்கின் உச்சம் ஆகும்.

தேர்தல் தொடங்கும் போதே இரண்டு முதலமைச்சர் களைச் சிறையில் அடைத்தது மோடியின் வல்லதிகார அரசு.

புலனாய்வு அமைப்புகளை ஏவி எதிர்க் கட்சியி னரை அச்சுறுத்தியதுடன் விசாரணை என்ற பெயரில் அவர்கள் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவதைத் தடுத்தது. வெகு மக்களுக்கான ஊடகங்கள் அனைத்தையும் மோடி தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ள தால் மோடியின் பரப்புரையை மட்டுமே ஒளிபரப்பின. எதிர்க்கட்சியினரின் பரப்புரை ஒளிபரப்பவிடாமல் தடுக்கப்பட்டது. விதிவிலக்காக சில ஊடகங்களே எதிர்க் கட்சியினரின் தேர்தல் பரப்புரைகளை ஒளிபரப்பின.

மோடியின் பரப்புரை வசதிக்கேற்ப ஏழு கட்ட வாக்குப் பதிவை 44 நாள்களில் நடத்திடத் திட்டமிட்டது தேர்தல் ஆணையம்.

தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தேர்தல் பரப்புரைகளின் போது, அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழாவிற்கு அழைப்பு விடுத்தும் கலந்து கொள்ளாத எதிர்க் கட்சியினரை இராமருக்கு-இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்று கூறினார். இசுலாமியர்களை ஊடுருவல்காரர்கள், அதிகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவர்கள் என்று சாடினார். பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன, பழங்குடியினரின் இடஒதுக்கீட்டைப் பறித்து இசுலாமியர்களுக்கு எதிர்க்கட்சியினர் கொடுத்து விடுவார்கள் என்றும் இரண்டு எருமைகள் இருந்தால் ஒரு எருமையைப் பறித்துக் கொடுத்து விடுவார்கள் என்றும் மக்களை அச்சமூட்டினார். “நான் சாதாரணப் பிறவி அல்ல; குறிப்பிட்டக் கடமையை நிறைவேற்று வதற்காகக் கடவுளால் அனுப்பப்பட்டிருக்கிறேன்” என்று நா கூசாமல் நரேந்திர மோடி பேசினார்.

உத்தரப்பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களில் “உங்களைத் தென்னிந்தியர்கள் இழிவாகப் பேசுகின்றார்; நடத்துகின்றனர்” என்று கூறி இனப்பகை மூட்டினார். ஒடிசாவில் நவீன் பட்நாயக்கின் நம்பிக்கைக் குரியவராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்தத் தமிழரான வி.கே.பாண்டியனை ஒரிசாவில் ஆட்சி செய்ய அனுமதிக்கலாமா என்று மோடியும் அமித்சாவும் வினவினர். புரி செகந்நாதர் கோயில் கருவூலத்தின் காணாமல் போன திறவுகோல் தமிழர்களிடம் உள்ளது எனத் திருட்டுப் பழி சுமத்தினார் மோடி. அமைச்சர் ஸ்மிருதி இராணி ஒடிசாவின் கனிம வளங்கள் பாண்டியன் மூலம் தமிழ்நாட்டினரால் கொள்ளையடிக்கப்படுகின்றன என்றார். இவ்வாறு மதம், மொழி, இனம், சாதி, கடவுள் ஆகியவற்றின் பெயரால் பா.ச.க. தலைவர்கள் தேர்தல் நடத்தை விதிகளுக்குப் புறம்பாகப் பரப்புரை செய்தனர்.

தேர்தல் நடத்தை விதிகளைச் சிறிதும் மதிக்காமல் வெளிப்படையாக மீறி நடந்த மோடியின் செயல் களைத் தடுக்காமல் ஒரு பக்கச் சாய்வாகத் தேர்தல் ஆணையம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

மேற்கூறியவாறு பா.ச.க. மோடி பற்பல முறை கேடான கயமைச் செயல்களைச் செய்தும் சரிவுக்குக் காரணங்கள் யாவை?

மக்கள் அன்றாட வாழ்வில் அல்லல்பட்டுக் கொண்டுள்ள பொருளாதாரச் சிக்கல்களைக் களையாமை, இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்காமை, வேலைகள் செய்வோர் குறைவான கூலி பெறும் நிலையை மாற்றிட முயலாமை, சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் போதுமான வருவாய் பெற முடியாத நிலையைப் போக்கிட அரசு போதுமான உதவிகள் செய்யாமை, இன்றியமையாப் பண்டங்கள் விலை உயர்வைக் கட்டுப்படுத்தாமை, உயர் வருமானம் பெறுபவர்களுக்கும் குறைந்த வருமானம் பெறுபவர்

களுக்குமான இடைவெளி அதிகரித்துக் கொண்டே போகும் நிலையைச் சரிசெய்திட திட்டங்கள் இன்மை என்பன பா.ச.க. மோடி ஆட்சியின் மீது மக்களிடையே கசப்பை வளர்த்தன.

ஆர்.எஸ்.எஸ்.இன் நிகழ்ச்சிநிரல்படி இந்து மக்களுக்கு இசுலாமியர்களுக்கு எதிராக மதவெறியூட்டி மக்களை மத அடிப்படையில் பிளவுபடுத்தியதும், இசுலாமிய மக்கள் மீது கொடுந்தாக்குதல் நடத்தியதும், பா.ச.க. ஆட்சி கொண்டுவந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம் (CAA) நிறைவேற்றப்பட்டதும் மதச் சிறுபான்மை யினருக்கு வெறுப்புணர்வை மூட்டின.

மேலும் பா.ச.க. மோடி அரசு எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு வஞ்சகமாகக் குறைவான நிதியளித் திடல், இயற்கைச் சீற்றங்களினால் ஏற்பட்ட பேரழிவு களைச் சீர்செய்வதற்கான மறுகட்டமைப்புக்கு நிதியுதவி செய்யாமை ஆகியன மாநிலக் கட்சிகளையும் மக்களையும் ஒன்றிய மோடி அரசுக்கு எதிராகச் சீற்றம் கொள்ளச் செய்தது.


2024 மக்களவைத் தேர்தலில் மக்கள் தீர்ப்பினால் வெகுமக்களின் பொருளாதாரச் சிக்கல்களை ஓரள வேனும் தீர்க்க கூட்டணி ஆட்சியில் முயற்சி மேற் கொள்ளலாம். அரசின் அடக்குமுறை, அச்சுறுத்தல்கள், மக்கள் கருத்துகளைப் கூறவே அஞ்சும் நிலை சிறிதளவேனும் மாறலாம். ஊடகங்களும் உயரதிகார அரசின் அமைப்புகளும் முதுகெலும்புடன் செயல்படு பவையாக மாறும் என எதிர்பார்க்கலாம். கடந்த பத்தாண்டுகளில் பறிக்கப்பட்டு ஓரிடத்தில் குவிக்கப்பட்ட மாநிலங்களின் அதிகாரங்கள் படிப்படியாக மீளப்பெற்றிட லாம் என்ற நம்பிக்கை ஆட்சியில் கூட்டாளிகளாக உள்ள மாநிலக் கட்சிகளால் ஏற்படுமா என்பதைப் பொறுத்திருந்துப் பார்ப்போம்.

ஒன்றிய கூட்டணி அரசு இவற்றை நிறைவேற்றிடவும் இந்துத்துவப் பாசிசத்தை முற்றிலும் முறியடிக்கவும் சனநாயகத்திற்கான மக்கள் இயக்கங்கள் இந்திய அளவில் ஒன்றிணைந்து கருத்தொற்றுமையுள்ள எதிர்க்கட்சிகளுடன் இணைந்தும் தனித்தும் தொடர்ந்து மக்கள் திரள் போராட் டங்களை நடத்த வேண்டும்.

22.06.2024 **- ஆசிரியர் குழு**

## தமிழ்ப்புலம் ஒருங்கிணைத்த

## குருமூர்த்தி ஆர்.எஸ்.எஸ்.இன் நிழல் அதிகாரம் நூல் வெளியீடு - அறிமுகக் கூட்டம்



சுஜாதா சிவஞானம் எழுதிய "குருமூர்த்தி ஆர்.எஸ்.எஸ்.இன் நிழல் அதிகாரம்" நூல் வெளியீடு மற்றும் அறிமுகக் கூட்டம் தேனாம் பேட்டை, பாரதி புத்தகாலயத்தின் அரும்பு சிறார் அரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் தோழர் பாலாஜி தியாகராஜன் வரவேற்புரை யாற்றினார். தோழர் குமரன் நூலை அறிமுகப்படுத்தி உரையாற்றினார். நூலை நிகழ்விற்கு வந்த விருந்தி னர்கள் மேடையில் வெளியிட்டனர்.

நிகழ்வின் இடையே தமிழை உயர்நீதிமன்றத்தின் வழக்குமொழியாக்கக் கோரி சென்னையில் நடைபெற்ற பட்டினிப் போராட்டத்தில் கலந்துகொண்ட தோழர் சின்னப்பத் தமிழர், தோழர் வளர்மதி ஆகியோருக்கு ஆடை அணிவித்து மதிப்பு செய்யப்பட்டது. அடுத்து தொடர்ச்சியாக தோழர் சீராளன்-புரட்சிகர இளைஞர் முன்னணி, தோழர் வாலாசா வல்லவன்-மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, தோழர் இந்திரகுமார்-ஊடகவியலாளர், பேரலை. தோழர் ஏ.எஸ். பன்னீர் செல்வன்-மூத்த ஊடகவியலாளர், தோழர். ஆதவன் தீட்சன்யா-தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம், தோழர். து. அரிபரந்தாமன்-மேனாள் உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம் ஆகியோர் கலந்துகொண்டு நூல் மதிப்புரை வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் நூலாசிரியர் தோழர். சுஜாதா சிவஞானம் (ஊடகவியலாளர் கேரவன்) அவர்கள் ஏற்புரை வழங்கினார். தோழர். மாதவன் (பெரியாரிய-அம்பேத்கரிய மக்கள் இயக்கம்) நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி கூறினார். கருத்துச் செறிவான, அரங்கு நிறைந்த நிகழ்வாக நூல் வெளியீட்டு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

## பெரியாரியல் அறிஞர் தோழர் வே. ஆனைமுத்து நூற்றாண்டு


# தோழர் வே.ஆ. சாதனைகள்



**- சா.குப்பன்**

21.06.1925இல் பிறந்து 06.04.2021இல் மறைவு வரை 95¾ ஆண்டுகள் வாழ்ந்த தோழர் வே. ஆனைமுத்து, 1947 முதல் 74 ஆண்டுகளில் சுயமரியாதை இயக்கச் சிந்தனைகளால், எழுதியவற்றால், பேசியவற்றால், செயல்பாடுகளால் சாதித்தவை பல பல.

21.06.1925இல் பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்ட புரத்திற்கு அருகில் முருக்கன்குடி எனும் சிற்றூரில் ஓர் எளிய உழவர் குடியில் பிறந்தார் தோழர் வே. ஆனைமுத்து. 1944இல் பெரியாரின் சொற்பொழிவு களைக் கேட்டு அப்போது முதல் பெரியாரின் தன்மானக் கொள்கை யாளர் ஆனார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'இடைநிலை' வரைக் கல்வி கற்ற தோழர் ஆனைமுத்து திராவிடர் கழகப் பணியை முழு நேரமும் மேற்கொள் வதற்காக தென்னார்க்காடு ஒழுங்கு முறை விற்பனைச் சங்கத்தில் 1952 முதல் ஏற்றிருந்தப் பணியை 1956இல் துறந்தார். அப்போது அவருடைய அகவை 30 ஆகும். 22.08.1954இல் தம் 29ஆம் அகவையில் சுசீலா அவர்களை மணந்தார்.



பெரியாரின் கட்டளையை ஏற்று வருணாசிரமத்தை - சாதியமைப்பைப் பாதுகாக்கும் அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 13(3) (a), (b), பிரிவு 25(1), பிரிவு 372(1)(b) ஆகியவற்றை எரித்துவிட்டுச் சிறைச் சென்ற 3000 தோழர்களுள் ஒருவர் ஆனைமுத்து. இவர் தமது 32 அகவையில், 2 அகவையில் ஒரு பெண் குழந்தைக்கும், 9 மாதத்தில் ஓர் ஆண் குழந் தைக்கும் தந்தை என்ற நிலையில் 18 மாதங்கள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டு வேலூர் சிறையிலும் திருச்சி சிறையிலும் தண்டனையைக் கழித்தார்.

1960இல் திருச்சியில் குடியமர்ந்த வே.ஆ. 1962 முதல் 1973 வரை பெரியாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். இவரது முன் முயற்சியால் 1970இல் திருச்சியில் 'சிந்தனையாளர் கழகம்' என்ற பெயரில் பதிவு செய்யப் பெற்ற ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டது. இதனைப் பெரியார் 07.03.1970இல் தொடங்கி வைத்தார். பொறியாளர் கு.ம.சுப்பிரமணியன் (1935-2020) அதன் தலைவர்; வே. ஆனைமுத்து அதன் செலாளர்.

பெரியாரின் தெரிந்தெடுக்கப்பட்ட எழுத்துக்களையும் பேச்சுக்களையும் தொகுத்து "பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்" (Thoughts of Periyar E.V.R.) என்ற பெயரில் இராயல் அளவில் 2104 பக்கங்கள், 3 தொகுதிகளாகப் பதிப்பித்தார். அந்நூல் 01.07.1974 அன்று திருச்சியில் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் வெளியிடப்பட்டது. இவ்வரிய பணிக்குத் தோழர் வே.ஆனைமுத்து செலுத்திய உழைப்பு அளவிடக்கரியதாகும்.

பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனை கள் வெளிவந்த பின்னர்தான் பெரியார் இயக்கத்தின் புறத்தேயும் அகத்தேயும் உள்ள அறிவாளர்கள், ஆய்வாளர்கள் பெரியார் சிந்தனை களின் செறிவு, நுட்பம், பரப்பு, ஆழம், தீவிரம் ஆகிய முழு பரிமாணங் களையும் அறிய வாய்ப்புக் கிடைக் கப் பெற்றது. பெரியார் நாத்திகர், ஆதிக்கப் பார்ப்பன எதிர்ப்பாளர், பெண்ணுரிமைப் பேசியவர் மட்டு மல்லர், அவர் ஒரு மாபெரும் சிந்தனைப் பேராறு என்பது உணரப் பட்டது. இத்தொகுப்பில் கூறியது கூறல் (Repetition) தவிர்க்கப் பட்டுள்ளது. இத்தொகுப்பு நூல் தான் "பெரியாரியல்" என்பது ஒரு மெய்யியல் என நிறுவிட முதல் அடிப்படை யாக அமைந்தது. 1974 பதிப்பில் விடுபட்ட வற்றுள் முதன்மையானவற்றைத் தெரிந்தெடுத்துச் சேர்த்து 9300 பக்கங்களில் 20 தொகுதிகளாகத் தொகுத்து, பகுத்து 2009இல் பதிப்பித்தார், வே. ஆனைமுத்து.

சமுதாயம், இயக்கங்கள், அரசியல், மதமும் கடவுளும், தத்துவம், அறிவு வளர்ச்சி, கலைகள், கிளர்ச்சிகள் என 13 பகுதிகளாகவும் 73 தலைப்புகளிலும் மேலும் பல உள் தலைப்புகளுடனும் நூல் தொகுக்கப்பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டுப் பதிப்பிலும் 2104 பக்கங்கள் எண் தொடர்ச்சியாகத் தரப்பட்டுள்ளது; 2009ஆம் ஆண்டுப் பதிப்பிலும் 9300 பக்கங்களுக்கும் தொடர் எண் தரப்பட்டுள்ளது. நூலில் வரும் முக்கியப் பெயர்கள், நிகழ்வுகள் பற்றி படிப்போர் புரிந்துகொள்வதற்காக அடிக்குறிப்பில் சிறு விளக்கம் தரப்பட்டுள்ளது. 73 தலைப்புகளுக்கும் ஒவ்வொரு தலைப்பின் இறுதியிலும் விளக்கக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

பெரியாரியலை ஒரு மெய்யியலாக நிலைநாட்டிட தம் வாழ்நாள் முழுவதும் சிந்தித்தவர், உழைத்தவர் தோழர் வே. ஆனைமுத்து.

15.01.1949, 16.01.1949இல் பெரியார் சென்னையில் திருக்குறள் மாநாடு, தமிழர் நெறி விளக்க மாநாடு நடத்தினார். அதன் தாக்கத்தினால் 1950இல் தனது அகவை 25இல் ஆனைமுத்துவும் ஆசிரியர் ந. கணபதியும் இணைந்து திருக்குறளார் வீ.முனிசாமியை ஆசிரியராகக் கொண்டு ‘‘குறள்மலர்’’ எனும் கிழமை இதழை நடத்தினர். 1956இல் வே.ஆ. தாம் ஆற்றி வந்த அரசுசார் பணியைத் துறந்துவிட்டதால், 11.01.1957இல் ‘‘குறள்முரசு’’ எனும் கிழமை இதழைத் தம் சொந்தப் பொறுப்பில் நடத்தினார். இவ்விதழ்களில் வே.ஆ. எழுதியக் கட்டுரைகள் பெரியார், குத்தூசியார் ஆகியோரின் கவனத்தை ஈர்த்தன. வே.ஆ. எழுதி, குறள் முரசில் வெளிவந்த கட்டுரைகள் ‘விடுதலை’இல் வெளியிடப்பட்டன.

‘சிந்தனையாளன்’ எனும் கிழமை இதழை 17.08.1974இல் திருச்சியில் தொடங்கி, தாமே ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் இருந்து நடத்தினார். இவர் 16.11.1975இல் திராவிடர் கழகத்திலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் 08.08.1976இல் ‘‘பெரியார் சமஉரிமைக் கழகம்’’ என்ற அமைப்பை இவருடன் ஒத்தக் கருத்தினர்களான சேலம் அ. சித்தையன், சீர்காழி மா. முத்துச்சாமி, அரியலூர் ஆ.செ. தங்கவேலு, வீரானந்தபுரம் ந.கணபதி, தக்கோலம் கா.ந.ஜலநாதன் போன்றவர்கள் துணையுடன் தொடங்கினார். இக் கழகமே 13.08.1988 முதல் ‘‘மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி’’ எனப் பெயர் மாற்றம் அடைந்தது.

சிந்தனையாளன் இதழ் 1982 திசம்பர் முதல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கிழமை இதழாகச் சென்னையில் இருந்து வெளியிடப் பட்டது. கிழமை இதழான சிந்தனையாளன் சில ஆண்டுகள் மாதமிருமுறை வெளியீடாகவும் பின் மாத இதழாகவும் தோழர் வே.ஆ. அவர்கள் இவ்விதழில் 1974 முதல் 2020 இறுதி வரை 45 ஆண்டுகளாக அவர் எழுதிய கருத்துக் கருவூலம் ஏராளம்.

1994 அக்டோபரில் தொடங்கிய ‘‘பெரியார் ஊழி’’ (Periyar Era) ஆங்கில மாத இதழ் 15 ஆண்டுகள் தோழர் வே.ஆனைமுத்து அவர்களை ஆசிரியராகவும் வெளியீட்டாளராகவும் கொண்டு வெளிவந்தது. இவ்விதழில் ஈழத்தமிழர் சிக்கல்கள் குறித்த செய்திகள் முதன்மையளிக்கப்பட்டு வந்தது. 1981 முதல் ஈழம் பற்றியச் செய்திகளில் அதிகம் நாட்டம் கொண்ட தோழர் வே.ஆ. 27.05.2005 முதல் 26.06.2025 வரை இலங்கைக்குச் சென்று வந்தார். முதல் 14 நாள்கள் ஈழத்திலும் அடுத்த 14 நாள்கள் மலையகப் பகுதிகளிலும் சுற்றுப்பயணம் செய்தார். 2 நாள்கள் கொழும்பில் செலவிட்டார். எதையும் நுட்பமாக ஆய்வுக் கண்ணோட் டத்தில் அணுகும் தோழர் வே.ஆ.அங்கு நாம் கண்டறிந்தவற்றை ‘‘தமிழீழத் தமிழரை, இலங்கை மலையகத் தமிழரை நீங்களும் பாருங்கள்! நீங்களும் பேசுங்கள்!’’ என்ற பெயரில் 256 பக்கங்கள் கொண்ட நூலாக்கி 17.09.2005இல் வெளியிட்டார்.

அறிஞர் வே. ஆனைமுத்து அவர்கள் 1947 முதல் 60 ஆண்டுகளுக்கு மேலாக எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி, பொதுவுடைமைவாதிகளும் பெரியார் கொள்கைகளும், வகுப்புரிமைப் போராட்டம் ஏன்?, இந்திய அரசியல் சட்டம் ஒரு மோசடி, நாத்திகர் போர்வாள் ஆகிய அய்ந்து நூல்கள் 1980இல் வெளியிடப்பட்டன. இந்த 5 நூல்களும் உள்ளடங்கிய 16 நூல்கள் ‘‘திருச்சி வே. ஆனைமுத்து கருத்துக் கருவூலம்’’ என்ற பெயரில் 13.10.2012 அன்று சூலூரில் வெளியிடப்பட்டன. இந்நூல்கள் பெரியார் சிந்தனைகளுக்குச் செழுமை சேர்க்கும் தன்மையன.

இவற்றுடன் பெரியார் 1912 முதல் 1973 வரை மேற்கொண்ட பயணங்களின் விவரங்களை 454 பக்கங்களில் ‘‘பெரியார் ஈ.வெ.ரா.பயணக் காலக் கண்ணாடி Periyar E.V.R.Detailed Chronology 1912-1973)” நூலாகப் பதிப்பித்தார். இது தோழர் வே.ஆ.வின் சிறப்பு வாய்ந்த பணியாகும்.

இரண்டாவது பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம் பீகார் மாநில முன்னாள் முதலமைச்சரும், பிற்படுத் தப்பட்ட மக்கள் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய பிந்தேசுவரி பிரசாத் மண்டல் (பி.பி.மண்டல்) தலைமையில் அப்போதையத் தலைமை அமைச்சர் மொரார்சி தேசாயால் 01.01.1979இல் அமைக்கப்பட மூல காரணர் தோழர் வே. ஆனைமுத்து ஆவார். 31.12.1980இல் மண்டல் ஆணையம் அளித்தப் பரிந்துரைப்படி தான் ஒன்றிய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர், அலுவலர்கள் பணியமர்த்தத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கப்பட 13.08.1990இல் வி.பி. சிங் ஆணை பிறப்பித்தார்.

ஒன்றிய அரசால் 29.01.1953இல் காகா கலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முதல் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆணையம், அதன் பரிந்துரை அறிக்கையை 30.03.1955இல் பிரதமர் சவகர்லால் நேருவிடம் அளித்தது. அந்த அறிக்கை பரிந்துரைத்ததன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஒன்றிய அரசு கிடப்பில் போட்டு காலாவதியாக்கப்பட்டது.

காகா கலேல்கர் ஆணையம் அளித்த பரிந்துரை அறிக்கைக்கு நேர்ந்த கதி, மண்டல் ஆணையப் பரிந்துரை

அறிக்கைக்கு நேர விடக் கூடாது என்ற கவலையில் தோழர் வே.ஆ. அவ்வறிக்கை அப்போதைய உள்துறை அமைச்சர் ஜெயில் சிங் அவர்களால் 26.01.1982 அன்று மக்களவையில் வெளியிடப்படுகின்ற வரை ஓயாது செயல்பட்டார். சரண் சிங் பிரதமராக இருந்த போது புது தில்லியில் அவரது வீட்டின் மறியல் போராட்டம், பின்னர் அகில இந்திய வானொலி நிலையம் முன் மறியல் செய்ததில் 1773 பேர் கைது செய்யப்பட்டு 15.11.1979 முதல் 01.12.1979 வரை திகார் சிறையில் அடைக்கப்பட்டனர்.

14.01.1980இல் இந்திரா பிரதமரான பின் 26.01.1982 அன்று மண்டல் அறிக்கைப் பரிந்துரைப்படி 27 விழுக்காடு இடஒதுக்கீடு கோரிக்கையை செயல்படுத்திட வலியுறுத்தி அவரவர் வீடுகளின்மீது கருப்புக் கொடி ஏற்றும் போராட்டம் அறிவித்ததால், 25.01.1982 அன்று உள்துறை அமைச்சருடன் பேச்சு வார்த்தைக்கு புதுதில்லி வருமாறு வே. ஆனைமுத்துவுக்கு அழைப்பு வந்தது. எனினும் பல ஊர்களில் 26.01.1982 அன்று கருப்புக் கொடி ஏற்றியதில் சில ஊர்களில் மட்டும் தோழர்கள் கைது செய்யப்பட்டனர். 1982க்குப்பின் திராவிடர் கழகம் உள்ளிட்ட அமைப்புகளும் அரசியல் கட்சிகளும் “மண்டல் அறிக்கையை செயல்படுத்து” எனப் போராடினர்.

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் தாதம்பட்டி எம். இராஜு மற்றும் சீர்காழி மா. முத்துச்சாமி இரு வரையும் உடன் அழைத்துக் கொண்டு 29.04.1978 முதல் 10.05.1978 முடிய 12 நாள்கள் புதுதில்லி உள்ளிட்ட வடமாநிலப் பயணம் மேற்கொண்டார். அப்போது பீகார் மாநில பிற்படுத்தப்பட்டோர் பேரவையின் தலைவரும் ஜனதா கட்சியின் மக்களவை உறுப்பினருமான இராம் அவதேஷ் சிங், நாடாளுமன்ற உறுப்பினர் பி.பி. மண்டல், விநாயக் பிரசாத் யாதவ் உள்ளிட்டோர் அறிமுகம் கிடைத்தது. 07.05.1978 அன்று முசாபர் நகரில் நடந்த உத்தரப்பிரதேச மாநில பிற்படுத்தப் பட்டோர் மாநாட்டைத் தொடங்கி வைத்து தோழர் வே.ஆ. உரையாற்றினார். அடுத்த நாள் 08.05.1978 அன்று குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ் ரெட்டியைச் சந்தித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒன்றிய அரசுப் பணியாளர் வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு கோரி விண்ணப்பம் ஒன்றினை அளித்தார். இதுவே மண்டல் ஆணையம் அமைக்கப்படுவதற்கான முதல் விதையாகும்.

24.06.1978 அன்று சென்னையில் அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் மாநாடு நடத்தினார். அதனைத் தொடங்கி வைத்திட ஒன்றிய உள்துறை இணை அமைச்சர் தணிக்லால் மண்டலை வரவழைத்தார். அம்மாநாட்டில் கர்நாடக வருவாய்த் துறை அமைச்சர் பி. பசுவலிங்கப்பா உள்ளிட்ட ஆந்திர, கேரள மாநிலத் தலைவர்கள் பங்கேற்றனர். இராம் அவதேஷ் சிங் முதலானோரும் கலந்து கொண்டனர். 19.08.1978இல் “அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் சாதியினர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் பேரவை”யை தோழர் வே.ஆ. உருவாக்கினார்.

இராம் அவதேஷ் சிங் அழைத்ததனால் தோழர் களுடன் பீகார் சென்ற வே.ஆ., 17.09.1978 அன்று பெரியார் நூற்றாண்டு விழாவை நடத்தித் தொடர்ந்து 18.10.1978 வரை 32 நாள்கள் 32 மாவட்டங்களில் பெரியார்-இடஒதுக்கீட்டுப் பரப்புரையை மேற்கொண் டார். 19.10.1978 அன்று பாட்னாவில் சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்பட்டது. விளைவாக பீகார் மாநில அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 20 விழுக்காடு இடஒதுக்கீடு செய்து முதலமைச்சர் கர்ப்பூரி தாகூர் 31.10.1978 அன்று ஆணை பிறப்பித்தார். 30 ஆண்டுகளாக இடஒதுக்கீடு மறுக்கப்பட்டிருந்த பீகார் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இது சாதனை ஆகும்.

பெரியார் நூற்றாண்டு விழாவையும் இராம் மனோகர் லோகியாவின் 80ஆம் பிறந்த நாளையும் இணைத்து தில்லியில் 23.3.1979 அன்று பெரியார் சமஉரிமைக் கழகமும் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவையும் கொண்டாட ஏற்பாடு செய்தார். அன்று பழைய தில்லி கோட்லா திடலிலிருந்து போட் கிளப் திடல் வரை சுமார் முப்பதாயிரம் பேர் பங்கேற்ற ஊர்வலம் நடந்தது. தோழர் வே. ஆனைமுத்து தலைமையில் போட் கிளப் திடலில் நடந்த விழாவில் அப்போதைய துணைத் தலைமையமைச்சர் பாபு செகசீவன்ராம் சிறப்புரை ஆற்றினார். பெரியார் இடஒதுக்கீடு தொடர்பாக எழுதிய, பேசிய சிலவற்றை இந்தியில் மொழிபெயர்த்த சிறு நூலை விழாவில் பங்கேற்ற ஒன்றிய அமைச்சர் இராஜ் நாராயணன் வெளியிட்டார்.

25.03.1979 அன்று பேரவையைச் சேர்ந்த 20 பேருடன் தலைமை அமைச்சர் மொரார்சி தேசாயைச் சந்தித்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு ஒன்றிய அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதை வே.ஆ.வும் மற்றவர்களும் வலியுறுத்தினர். ஏப்ரல் 1978 முதல் மண்டல் பரிந்துரையை ஏற்று பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை 16.11.1992இல் நடைமுறைப்படுத்தப்படும் வரை மொரார்சி தேசாய், சரண் சிங், இந்திரா காந்தி, வி.பி. சிங், நரசிம்மராவ் என 5 தலைமையமைச்சர்கள் காலத்தில் தோழர் வே. ஆனைமுத்து மேற்கொண்ட முயற்சிகள், போராட்டங்கள் குறித்து “மண்டல் குழு பரிந்துரை - மக்கள் நாயக உரிமைப் போர்” என தனி நூலாகவே தோழர் வே.ஆ. எழுதி வெளியிட்டார்.

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இடஒதுக்கீடு 31 விழுக்காடு என்றிருந்ததை அ.தி.மு.க.

எம்.ஜி. இராமச்சந்திரன் முதல மைச்சராக இருந்த போது, 02.07.1979இல் ஆண்டு வருமானம் ரூ.9000/-க்கு மேல் உள்ளவர்கள் இடஒதுக்கீடு பெற முடியாது என உத்தரவிட்டார். அப்போது எல்லோரும் வருமான அளவுகோல் புகுத்தப்பட்டதை அகற்றிடக் கோரியபோது, தோழர் வே.ஆனைமுத்து வருமான வரம்பு அகற்றப்படுவதுடன் 65 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 விழுக்காடாக உள்ள இடஒதுக்கீட்டை 60 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என அதற்கான




தரவுகளுடன் கோரிக்கை விண்ணப்பத்தினை 17.08.1979 இல் தமிழ்நாட்டு அரசுக்கு அளித்தார். அமைச்சராக இருந்த பண்ருட்டி எஸ். இராமச்சந்திரனிடம் இது பற்றி விரிவாக எடுத்துரைத்து, அவர் முதலமைச்சரிடம் கோரிக்கையின் நியாயத்தை விளக்கினார். 1980 சனவரியில் நடந்த மக்களவைப் பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்ததால் எம்.ஜி. இராமச்சந்திரன் அரசு பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை 50 விழுக்காடாக உயர்த்தி 01.02.1980இல் ஆணையிட்டது. இதுவும் ஆனைமுத்து அவர்களின் முயற்சி ஈட்டிய சாதனையாகும்.

தீர்வு காண வேண்டிய மக்கள் பிரச்சினைகள் பல இருந்த போதிலும் விகிதாசார இடப்பங்கீடு மற்றும் கூட்டரசியம் ஆகிய இரண்டை மட்டும் முதன்மை இலக்குகளாகக் கொண்டு செயல்படுவது என்று கட்சியின் தொடக்கத்திலேயே தீர்மானிக்கப்பட்டது.

இந்தியா இன்று ஒற்றை அதிகார மய்யமாகவும் ஒரே முற்றதிகார ஆட்சியாகவும் உள்ளது. எல்லா தேசிய மொழிகளும் இந்தியக் கூட்டரசின் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டும். மொழி அடிப்படையில் அமைந்துள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மாநில ஆட்சி மொழியே அம்மாநில எல்லைக்குள் இயங்கும் ஒன்றிய அரசு அலுவலகங்களிலும் ஆட்சிமொழியாகக் கட்டாயம் இருக்க வேண்டும்.

நடுவண் அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்பது அகற்றப்பட வேண்டும். அனைத்துத் துறைகளுக்கும் தேவையான அனைத்து நிலை அலுவலர்களை, பணியாளர்களைத் தேர்வு செய்யும் முற்றதிகாரம் அந்தந்த மாநிலப் பணியாளர் தேர்வாணையங்களுக்கே இருக்க வேண்டும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட மாநிலங்களுக்குத் தனித்தனி அரசமைப்புச் சட்டங்கள் வேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் ஒரு தேசியக் கொடியைக் கொண்டிருக்க வேண்டும்; தனக்கான பிரதேசத் தனிப்படையைக் (Territorial Army) கொண்டிருக்க வேண்டும்.

‘உண்மையான சமதர்ம, மதச்சார்பற்ற, சனநாயகத் தன்னாட்சிக் குடியரசுகள் இணைந்த கூட்டமைப்பாக இந்தியாவை மறுகட்டமைப்புச் செய்வோம்’ என்பதே தோழர் ஆனைமுத்து முன்வைத்த கொள்கை முழக்கமாகும்.

இந்த நோக்கத்திற்காக மேற்கு வங்காளம், பஞ்சாப், அசாம் ஆகிய மாநிலங்களில் ஒத்த கொள்கையுடைய அமைப்புகளுடன் சில முறை அங்கு சென்று உரையாடியுள்ளார். 1986 நவம்பரில் நடந்த ‘பன்மைத்துவத்திற்கு எதிரான மதவாதம்’ என்ற மாநாட்டில் சனநாயகத்திற்கும், கூட்டாட்சிக்கும், பன்மைத்துவத்திற்கும் அச்சுறுத்தலாக இந்திய ஒன்றிய அரசு உள்ளது என உரையாற்றினார். 1987 ஏப்ரலில் லூதியானாவிலும் 1987 செப்டம்பரில் ஜலந்தரிலும் நடைபெற்ற மாநாடுகளில் பங்கேற்று ஆற்றிய உரைகளின் தொகுப்பை ‘‘அழிவின் விளிம்பில் கூட்டரசியம்’’ (Federation in Peril) எனும் 48 பக்கங்கள் கொண்ட நூலாக 1988 இல் வெளியிட்டார்.

மேலும் தோழர் வே. ஆனைமுத்து அவர்களின் பங்களிப்புகளில் மார்க்சியத்தையும் பெரியாரியத்தை இசைவுப்படுத்தி நிறுவியது முதன்மையானதாகும்.

பெரியாரியல் பேரறிஞர் தோழர் வே. ஆனைமுத்து நுண்ணறிவாலும், எண்ணத்தாலும், எழுத்தாலும், செயலாலும் ஆற்றியவை பல பல. அவற்றுள் சில அவரது நூறாவது பிறந்த நாளான 21.06.2024இல் நினைவுகூரப்பட்டுள்ளது.

**தோழர் வே. ஆனைமுத்துவின் புகழ் ஓங்குக!**

# கலைஞர் நூற்றாண்டு நிறைவும் திராவிட இயக்கத் திட்டங்களும் சட்டங்களும்



பேராசிரியர் **மு. நாகநாதன்**

தந்தை பெரியார், கலைஞர், பேராசிரியர் க.அன்பழகன் சிந்தனையாளன் ஆசிரியர் ஆனைமுத்து ஆகிய திராவிட இயக்கப் பெரும் ஆளுமைகள் 90 வயதிற்கு மேல் வாழ்வாங்கு வாழ்ந்தார்கள். தற்போது விடுதலை ஆசிரியர் வீரமணியார் 91 வயதைக் கடந்து சுறுசுறுப்போடு இயங்கி திராவிட இயக்கப் பணிகளை உயர்த்தி பிடித்து வருகிறார்.

இதில் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால் மேற்கூறிய தலைவர்கள் அனைவரும் தந்தை பெரியாரின் தடம்மாறா கொள்கை வழி அரிமாக்கள். இத்தலைவர்கள் கண்ட களங்கள் பலபல. பெற்ற வெற்றிகளும் பலபல. இருப்பினும் சனாதனம் மீண்டும் மீண்டும் வாலாட்டி வருகிறது. ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கிற மூடநம்பிக்கைகளை நிலைநிறுத்துகிற பல பிற்போக்குத்தனமான மதம் சார்ந்த மூடநம்பிக்கைகளை எதிர்க்க வேண்டிய காலக்கட்டத்தில் நாம் உள்ளோம். இன்று உச்ச நீதிமன்ற, உயர்நீதிமன்றத் தீர்ப்புகளும் அதனை ஒட்டி நடைபெறுகிற மூடநம்பிக்கை நிகழ்வுகளும் இதற்குச் சான்று பகர்கின்றன.

திராவிட இயக்கத்தின் தொடர் பணிகள் இன்றும் பெரு மளவில் தேவைப்படுகின்றன என்பதையே இந்நிகழ்வுகள் மெய்ப்பிக்கின்றன. ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொள்ளும் சனாதனம் பெரும்பான்மை மக்களை இழிவுபடுத்தி மதமயக் கத்தின் பெயரால் மக்களை ஏமாற்றி இன்றும் தனது ஆதிக் கத்தைத் தொடர்கின்றது.

பிரித்தானியக் கிழக்கிந்திய குழும ஆட்சியில் பல கொடு மையான மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பல சட்டங்களும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பார்ப்பனர்களில் உயர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்ட வங்கத்தின் குல்மி பார்ப்பன வகுப்பில் பிறந்தவர்தான் இராஜாராம் மோகன் ராய். இந்த குல்மி பார்ப்பனர்கள் தாங்கள்தான் உயர்ந்த வர்கள் என்று கூறிக்கொள்ள அஞ்சவில்லை.

இராஜாராம் மோகன்ராயின் சமூக சீர்த்திருத்தத்தின் தொடக்கம் அவரது இல்லத்திலிருந்தே புறப்பட்டது. இராஜா ராமின் அண்ணன் இறந்த போது அவருடைய அண்ணி யைக் கட்டாயப்படுத்தி உடன்கட்டை ஏற்றினர். அண்ணி உயிரோடு எரிந்த காட்சியைக் கண்ட இராஜாராம் மோகன் ராய் பல எதிர்ப்புகளையும் மீறி உடன்கட்டை ஏறுவதைத் தடைசெய்ய வேண்டும் என்று பிரித்தானியக் கிழக்கிந்தியக் குழுமத்திடம் வேண்டுகோள் விடுத்தார். இந்தக் கொடுமையைக் கண்ட கிழக்கிந்தியக் குழுமத் தலைமை ஆளுநர் பெண்டிங்க் 1829ஆம் ஆண்டு உடன்கட்டை ஏறுதலுக்குத் தடை விதித்தார். 1857இல் இந்தியா, பிரித்தானியப் பேரரசின் நேரடி ஆட்சியின்கீழ் வந்த பிறகு 1861ஆம் ஆண்டு இந்தியா முழுமைக்கும் உடன்கட்டை ஏறுதல் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்தொடர்ச்சியாக தென் இந்தியாவில் ஐதராபத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்த நிசாம் மன்னர்கள் ஆட்சியில் ஆறாம் நிசாம் ஆசாப் ஜா மேற்கத்தியக் கல்வி முறையில் பயின்றவர். எனவே தனது ஆட்சிக்காலத்தில் உடன்கட்டை ஏறுதலைத் தடைசெய்தார். இது தென்னிந்தியாவில் நடைபெற்ற முதன் மையான முற்போக்கு நடவடிக்கையாகும்.

இருப்பினும் வழக்கம் போல மதவெறியும் மூடநம்பிக் கைகளும் வடநாட்டில் கைகோர்த்தன. 1987ஆம் ஆண்டு செப்டம்பர் 4 அன்று இராஜஸ்தான் மாநிலத்தில் 18 வயதே ஆன ரூப்கன்வர் என்ற பெண்ணை அவரது கணவர் இறந்த பிறகு உயிரோடு எரித்தனர். மதவெறியர்கள் ரூப்கன்வரைத் தூயத் தாய் என்றும் சதி அன்னை என்றும் போற்றிக் கொண்டாடினர். இந்திய அளவிலும் உலக அளவிலும் இக்கொடுமை அதிர்ச்சி அலைகளை அனுப்பியது. இதன் பிறகுதான் இராஜஸ்தான் சட்டமன்றத்தில் ஒரு புதியச் சட்டம் இயற்றப்பட்டது. உடன்கட்டை ஏறும் நடைமுறையைப் பின் பற்றுபவர்களுக்கும் ஆதரிப்பவர்களுக்கும் இறக்கும் வரை ஆயுள் சிறைத் தண்டனை என்று இச்சட்டம் வலியுறுத்தியது.

சனாதனமும் மூடநம்பிக்கைகளும் காலந்தோறும் புதிய தோற்றத்தில் மக்களை மதமயக்கத்தில் ஆழ்த்தின. இதன் காரணமாக அறிவியல் கண்ணோட்டத்தைத் துறந்து மக்கள் மத மாயையில் இன்றும் வீழ்ந்து வருகின்றனர்.

1995ஆம் ஆண்டு பிள்ளையார் சிலை பால் குடிப்பது என்ற மூடநம்பிக்கையை இந்தியா முழுவதும் பரப்பினர். மக்களும் பிள்ளையாருக்கு முன் பாலை எடுத்துக்கொண்டு வரிசையில் நின்றனர். இதைக் கண்ணுற்ற மராட்டிய மாநிலத்தின் மருத்துவர் தபோல்கர் இந்து மத வெறியர்கள் போட்ட ஆட்டத்தை கண்டு கொதித்தெழுந்தார். இது ஒரு ஏமாற்று வித்தை, அறிவியல் உலகிற்குப் பொருந்தாத மத வாதிகளின் செயல் என்று பரப்புரை செய்தார். பார்ப்பனராக இருந்தாலும் தபோல்கரை மதவெறிப் பார்ப்பனர்கள் விட்டு வைக்கவில்லை. அவரைச் சுட்டுக்கொன்றனர். அண்மையில் மும்பை நீதிமன்றம் இரண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கி இருக்கிறது. இருப்பினும் இவர்களுக்கு மூளையாகச் செயல்பட்ட ஒரு இந்துமத வெறியனுக்கு எந்தத் தண்டனையும் வழங்கவில்லை.

பல முற்போக்காளர்கள் நீதிமன்றச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளனர். தபோல்கர் குடும்பத்தினர் நீதிமன்றத்தில்


மேல் முறையீடு செய்ய உள்ளனர். பேராசிரியர் பன்சாரே, துணைவேந்தராக இருந்த கல்புர்கி, சமூகச் செயற்பாட்டாளர் கௌரி லங்கேஷ் ஆகியோர் அனைவரும் தபோல்கர் கொல்லப்பட்ட வழியிலேயே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். வெளிவந்த ஆதாரங்களின் அடிப்படையில் இந்தப் படுகொலைகளைச் செய்தவர்கள் ஒரே அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து வெளிவந்துள்ளது.

இதுபோன்ற மதவெறியின் அடிப்படையில் நடக்கும் தாக்குதல்கள், படுகொலைகள், பசுக்காவலர்கள் என்ற பெயரில் நடக்கும் அராஜகங்கள் 2014இல் ஒன்றிய அரசில் பாசிச பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு தொடர்கின்றன. அண்மையில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி தான் ஆர்.எஸ்.எஸ். இன் கொள்கைளைப் பின்பற்றியவன் என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார். இந்துத்துவ வெறி நிர்வாகத்திலும் நீதித்துறையிலும் ஊடுருவும் போக்கினை நீதிபதி தனது ஒப்புதல் வாக்குமூலமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பெண்களை உயிரோடு எரிப்பது, பெண்களுக்குக் கல்வி மறுப்பது, பெண்களுக்குச் சொத்துரிமை அளிப்பதைத் தடுப்பது, குழந்தைத் திருமணத்தை ஆதரிப்பது, விதவைகள் திருமணத்தைத் தடை செய்வது போன்ற பிற்போக்குத் தனமான இந்து மதத்தின் பெயரால் நடைபெறும் பல கொடுமைகளைச் சடங்குகள் என்ற பெயரில் ஆதரிப்பது தகவல் தொழில்நுட்பப் புரட்சி மேலோங்கிய இக்காலத்திலும் நடைபெறுவது வெட்கக்கேடானது.

இத்தகைய பிற்போக்குவாதிகளின் ஆதிக்கம் அரசியலில் சமூகத்தில் நிலவி வந்த, நிலவி வருகின்ற சூழலில் தமிழ்நாடு மூடச்செயல்களுக்கு விதிவிலக்காக இருந்து வருகிறது. இதற்கு முதன்மையானக் காரணம் என்ன? என்பதை இன்று வடமாநிலங்கள் உட்பட பலர் உணரத் தொடங்கியுள்ளனர். திராவிட இயக்கத்தின் தொடர் பணிகளும் திமுக ஆட்சியில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்ட பல முற்போக்குச் சட்டங்களும் திட்டங்களும் இந்தியாவிற்கே வழிகாட்டியாக அமைகின்றன.

பேரறிஞர் அண்ணா 60ஆம் வயதில் மறைந்தாலும் தந்தை பெரியாரின் பல கொள்கைகளுக்குத் தமிழ்நாட்டில் அடித்தளம் அமைத்தார். 1967இல் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு அமைச்சரவையே தந்தை பெரியாருக்குக் காணிக்கை என்று சட்டமன்றத்தில் அறிவித்தார். மிகத் துணிவுடன் அரசு அலுவலகங்களில் இருந்து கடவுள் படங்களை நீக்கினார். சுயமரியாதை திருமணச் சட்டத்தை இயற்றினார். சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டினார். தற்போது உச்ச நீதிமன்றம் இந்து மத மரபுகளைக் கடைப்பிடித்து திருமணம் செய்தால்தான் இந்து திருமணம் செல்லும் என்று ஓர் அதிர்ச்சியான தீர்ப்பை வழங்கியுள்ளது. இதன் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதி நாயகம் சந்துரு அவர்கள் ஆங்கில ஏட்டிலும் ஜூனியர் விகடன் ஏட்டிலும் இரு கட்டுரைகள்



எழுதியிருந்தார். தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்து திருமண முறை சடங்குகளைப் பின்பற்றாமல் பார்ப்பனரை வைத்து நடத்தும் வைதீக முறையை ஏற்காமல் நடத்தப்படும் திருமணம் சட்டப்படி செல்லும் என்ற கருத்தைப் பல நீதிமன்றத் தீர்ப்புகளைச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருந்தார். இது தந்தை பெரியார் வலியுறுத்திய சுயமரியாதை திருமண முறையும் அறிஞர் அண்ணா அளித்த சட்ட வடிவமும் காலத்தினால் என்றும் நிலைத்திருக்கக் கூடிய வலிமையான சட்டம் என்பதை இன்று பல முற்போக்காளர்கள் உணர்கின்றனர்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 1950ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த பிறகு இடஒதுக்கீடு கொள்கை போன்ற பல முற்போக்குச் சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு நீதிமன்றங்கள் தங்களது தீர்ப்புகளால் பல தடைகளைச் செய்தன என்பதைப் பல ஆய்வாளர்கள் இன்றைக்குச் சட்ட இயல் நூல்களில் குறிப்பிட்டு வருகின்றனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தில் உள்ள பல பிரிவுகள் இத்தகைய தடைகளுக்கும் முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைகின்றன. எனவேதான் 1957இல் தந்தை பெரியார் தலைமையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரிக்கும் போராட்டத்தில் கலந்து கொண்டு பல ஆயிரம் பேர் சிறை சென்றனர். சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டம் எரிப்பு என்ற தலைப்பில் திராவிட இயக்கச் சிந்தனையாளர் திருச்சி என் செல்வேந்திரன் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார்.

இந்நூலில் தேசிய மரியாதையை அவமதிக்கும் செயலுக்கு மூன்றாண்டுகள் கடும் தண்டனை என்ற பெயரில் 1957ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் தமிழகச் சட்டமன்றத்தில் முதல்வர் காமராசர் தலைமையில் அமைந்த காங்கிரசு அரசால் (The Prevension of Insult to National Honour) கொண்டு வரப்பட்ட சட்டம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. சட்டமன்றத்தில் 15 உறுப்பினர்களுடன் நுழைந்து திமுகவின்

சட்டமன்றத் தலைவராக அறிஞர் அண்ணா இக்காலக்கட்டத்தில் செயல்பட்டார். காங்கிரசு சீர்திருத்தக் கட்சி என்ற ஒன்றைத் தொடங்கி அதன் சட்டமன்ற உறுப்பினர்களின் தலைவராக வி.கே.இராமசாமி இருந்தார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் இடம்பெற்றனர். அறிஞர் அண்ணாவைத் தவிர வேறு யாரும் இந்தச் சட்ட வடிவை எதிர்க்கவில்லை. மேலும் இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க வேண்டும் என்று தான் கம்யூனிஸ்ட் கட்சி உட்படப் பல கட்சிகள் வலியுறுத்தின.

அறிஞர் அண்ணா தனது சட்டமன்ற உரையைத் தொடங்கும் போது, ''இன்று வரையில் குற்றங்கள் என்று கருதப்படாமல் இருந்து வந்த சில செயல்கள் இனி மூன்றாண்டுகளுக்குத் தண்டிக்கத்தக்கக் கடுமையான குற்றங்கள் என்று தெரிவிக்கும் இந்த மசோதாவை நான் தீதானது, தேவையற்றது, கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது என்று கூறி கண்டிக்கிறேன் என்று சொன்னால் இக்காரியங்களிலே பங்கேற்றுக் கொள்கிறவன் என்று நீங்கள் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று எண்ணுகிறேன்.

காந்தியாரின் உயிரை வாங்கிவிட்ட சாதிவெறியை அடக்குவதற்கு நாங்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னால் பாராட்டுவேன். காந்தியாரின் சமாதிக்கு மாலை போட்டுவிட்டு கதர் கட்டிக் கொண்டிருக்கிற காங்கிரசுகாரர்கள்தான் இன்றைக்கு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஒரு காலத்தில் பெரியார் மாளிகையில் தங்கியிருந்தவர்கள் தான். காந்தியார் சாதிவெறியனால் கொல்லப்பட்ட நேரத்திலே காந்தியார் இருந்த இந்த நாட்டிற்குக் காந்தி நாடு என்றும் இந்நாட்டில் உள்ள மதத்திற்குக் காந்தி மதம் என்றும் பெயர் வைக்க வேண்டும் என்று வெளிப்படையாகச் சொன்னவர் பெரியார்தான் என்பதை அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் மறந்திருக்கலாம். ஆனால் நாடு மறந்திருக்காது. நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். காந்தி பெரியாரின் மாளிகையில் தங்கியிருக்கிறார். காந்தி நினைவாகத் தன் தமக்கையின் பெண்ணுக்குப் பெரியார் காந்தி என்று பெயர் வைத்திருக்கிறார்.

காந்தியார் படத்தைக் கொளுத்துவேன், அரசியல் சட்டத்தைக் கொளுத்துவேன் என்று பெரியார் சொன்னார் என்றால் அவருக்கு அவற்றின் பெயரில் இருக்கின்ற வெறுப்பினால் அல்ல; தேசியக் கொடிக்குத் தேசியச் சட்டத்திற்கு இழுக்கை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் அல்ல; இவைகளை எந்தக் காரணத்திற்காகக் கொளுத்தச் சொல்கிறேன், கிழிக்கச் சொல்கிறேன் என அவர் எடுத்துச் சொல்கிறாரோ அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்குவதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்வதற்காக அவருடைய கவனத்தைக் கவருவதற்காகச் சொல்லப்படுகிற விஷயங்கள் தாம். அவற்றின் பெயரில் அவருக்கு வெறுப்பு இல்லை என்பதை நாம் உணர்ந்து கொண்டு அவர் எந்தெந்த காரணங்களுக்காக உள்ளம் குமுறிக்கொண்டிருக்கிறாரோ அவற்றை நிறைவேற்ற இவர்கள் ஏற்பாடுகள் செய்தார்களா?

இந்தக் குற்றத்தைச் செய்தால் இத்தனை வருடங்கள் தண்டனைக் கிடைக்கும் என அவரிடம் சென்று சொல்லும் அறிவிப்பாகத்தான் இருக்கும். அதைப்போய் நான் சொல்ல வேண்டும் என்று கேட்கிறீர்கள். பத்திரிக்கை வாயிலாக அவரே பார்த்துக்கொள்வார். உண்மையில் நான் அவரைப் போய் இந்தக் காரணமாகச் சந்திப்பதினால் இலாபம் ஏற்படும் என்றால் திரும்பவும் நாங்கள் அவரோடு ஒட்டிக்கொள்ள முடியும் என்றால் மகன் தந்தை செய்ததை மறந்து திரும்பவும் அவர்களிடத்தில் ஒட்டிக்கொள்வது குற்றங்களில் ஒன்றல்ல. குணங்களில் ஒன்று என்பதை நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்''. (அண்ணா அறிவுக்கொடை சட்டமன்ற உரைகள் பகுதி 1, 1957-58 பக்.110-135).

அறிஞர் அண்ணா தொலைநோக்குமிக்கத் திராவிட இயக்கத் தலைவர் மட்டுமல்ல; தந்தை பெரியாரைப் பிரிந்திருந்தாலும் தந்தை பெரியாரின் கொள்கையை விட்டுக் கொடுக்காமல் அக்கொள்கைகளைப் போற்றியவர் என்பதற்கு மேற்கூறிய சட்டமன்ற நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. இந்தச் சட்டமன்ற உரை நிகழ்த்தப்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு 1967இல் முதல்வராகப் பொறுப்பேற்றுத் தந்தை பெரியாரின் சமூக நீதி, மாநிலங்கள் உரிமை, பெண்ணுரிமை போற்றுவதற்குப் பல திட்டங்களைச் செயல்படுத்தி மெய்ப்பித்தார். இந்தச் சமூகச் சீர்திருத்தத் தொடர் பயணத்தை அறிஞர் அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் தனது 5 முறை முதல்வராகப் பொறுப்பேற்ற காலத்தில் தொடர்ந்தார்.

கலைஞர் 1971ஆம் ஆண்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றினார். சனாதன வெறியர்கள் உச்சநீதிமன்றத்திற்குச் சென்று இந்து மரபுகளை அழிக்கும் முயற்சி என்று தடை பெற்றனர். அன்றும் இன்றும் உச்சநீதிமன்றத்தின் செயல்பாடுகளில் மாற்றமில்லை என்பதற்கு அண்மையில் வழங்கிய இந்து திருமணம் பற்றியத் தீர்ப்பே எடுத்துக்காட்டாகும். 2006ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சிப்பொறுப்பேற்ற போது சிதம்பரம் கோயிலை தீட்சிதர்களின் கட்டுப்பாட்டில் இருந்து மாநில அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்கு மாற்றினார். இந்த நடவடிக்கையும் சுப்ரமணியசாமி உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கால் தடைபட்டுள்ளது.

அண்மையில் இந்து மத நம்பிக்கை என்ற பெயரில் பார்ப்பனர் சாப்பிட்ட எச்சில் இலையில் உருளுவது தவறல்ல என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியதும் இதற்கு மற்றொரு சான்று. பிற்போக்குச் சமூகக் கொடுமைகளை நீக்குவதற்கு முற்போக்கான சட்டங்கள் இயற்றப்பட்ட பிறகு அச்சட்டங்களுக்குத் தடையாணையைப் பிறப்பிப்பது நீதிமன்றங்களின் தொடர் செயலாகி வருகிறது. மதச்சார்பற்ற நிலையை சில நீதிபதிகள்தான் பின்பற்றி தீர்ப்புகளை

வழங்குகின்றனர். பெரும்பாலான வழக்குகளில் இந்துமதச் சார்பு நிலையையே நீதிமன்றங்கள் எடுத்துவந்துள்ளன. இதன் காரணமாகதான் தந்தை பெரியார் நீதிமன்றத்தைத் தனது இறுதி உரையில்கூட கடுமையாகக் கண்டித்தார். இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பற்றித் தந்தை பெரியாரின் பார்வை சரியானதே என்பதைக் காலம் மெய்ப்பித்து வருகிறது.

1989ஆம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்த போது மிகவும் பின்தங்கிய சமுதாயப் பிரிவினருக்கு 20 விழுக்காடு தனி இடஒதுக்கீட்டு ஆணையைப் பிறப்பிப்பித்தார் முதல்வர் கலைஞர். இந்தப் புதிய அணுகுமுறையின் வழியாகத் தமிழ்நாட்டில் மிகப் பின்தங்கிய வகுப்பினர் பெருமளவில் உயர் கல்வியிலும் அரசு வேலைவாய்ப்புகளிலும் உயர் வதற்கு வழிவகுக்கப்பட்டது. மகளிருக்குச் சொத்துரிமையில் சம பங்கு அளிக்கும் முற்போக்கான சட்டமும் நிறைவேற்றப் பட்டது. இந்தியாவிலேயே முதன்முதலாக 1989ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசின் நிதியுதவியோடு தொடங்கப்பட்டன. இன்று பெண்களின் வாழ்க்கை முறையில் பெரும் மாற்றத்தை இத்திட்டம் உருவாக்கியுள்ளது. தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களில் இடஒதுக்கீடு முறை முதன்முதலாக 1989இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் கலைஞர் ஆட்சியில்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாகத்தான் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு பல்கலைக்கழகங்களில் ஆசிரியர், ஆசிரியரல்லாத பணிகளுக்கு அனைத்துச் சமூகத் தினரும் வேலை வாய்ப்புகளைப் பெற வழிவகை செய்தது.

1996ஆம் ஆண்டு கலைஞர் முதல்வராகப் பொறுப்பேற்ற போது தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பல பகுதிகளில் பெரியார் சமத்துவபுரம் என்ற திட்டத்தைத் தொடங்கி அனைத்துச் சமூகத்தினரும் ஒரே வாழ்விடத்தில் தங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தார். ஒரு சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து அமைதியாக வாழத் தொடங்கினால் நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஊக்கப்படுத்தப்படும் என்பதைத் தான் சமூக மூலதனம் (Social Capital) என்று பொருளாதார அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். தமிழ்நாட்டில் இதற்கான அடித்தளம் தந்தை பெரியார் சமத்துவபுரம் திட்டத்தின் வழியாக அமைக்கப்பட்டது. இதன்தொடர்பாக இக்கட்டுரை ஆசிரியரும் தமிழ்நாட்டு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு உறுப்பினருமான பேராசிரியர் ஜோதி சிவஞானமும் இணைந்து மும்பையில் இருந்து வெளிவரும் அரசியல் பொருளாதார ஏட்டில் 25 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கட்டு ரையை வெளியிட்டனர். தற்போது சாதி மத வேறுபாடுகளைப் பெருக்கி வேற்றுமைகளை பாஜக ஆளும் மாநிலங்களில் அரசே ஊக்குவிப்பது இந்தச் சமூக மூலதனக் கொள்கையைச் சிதைக்கும் செயலாகும்.

2006இல் கலைஞர் 5ஆம் முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற போது அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக லாம் சட்டத்தை மீண்டும் இயற்றி இன்று உச்சநீதிமன்றத் தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 2021இல் திமுக ஆட்சிய மைந்த பிறகு பயிற்சிப் பெற்ற அனைத்துச் சாதிகளைச் சார்ந்த 24 அர்ச்சகர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. 2023இல் உயர்நீதிமன்றம் இந்த நியமனங் களை ஏற்றுக்கொண்டது. இடஒதுக்கீட்டு கொள்கையில் இசுலாமிய சமுதாயத்தினருக்கு 3.5 விழுக்காடும் தாழ்த்தப் பட்ட பிரிவில் அருந்ததியருக்கு 3 விழுக்காடு தனி ஒதுக்கீடும் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

2006இல் இக்கட்டுரை ஆசிரியர் மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்ற போது 11ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த செலவான ரூ.92,332 கோடியில் 44 விழுக்காடு கல்வி, பொதுச் சுகாதாரம், சமூக நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது. இந்த நிதி ஒதுக்கீட்டைத் திட்டக்குழுவின் தலைவரான கலைஞர் முழுமையாக ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினார். சான்றாக ஒன்றிய அரசின் அனைவருக்கும் கல்வி என்கிற திட்டம் நிறை வேற்றப்படும் போது 2008இல் ஒரு புள்ளிவிவரக் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தப் புள்ளிவிவரங்களின்படி தாழ்த் தப்பட்டோர், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த பள்ளி மாணவர்களின் சேர்க்கை ஏறக்குறைய 98 விழுக்காடு அளவிற்குத் தமிழ்நாட்டி லிருந்தது. இது பலருக்கு வியப்பை அளித்தது. அதற்கு காரணம் 2006ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு சத்துணவோடு பள்ளி மாணவர்களுக்கு முட்டைகளும் வழங்கப்பட்டன. பள்ளி மாணவர்களின் புரதச் சத்து வளர்ச்சிக்கு இத்திட்டம் பெரும் பங்கினை அளித்தது.

திராவிட இயக்கத்தினுடைய அடிப்படைக் கொள்கை ளான இடஒதுக்கீடு, பெண்கள் முன்னேற்றம் போன்ற சமூக நீதிக் கொள்கைகள் திமுக ஆட்சியில் பின்பற்றபட்ட காரணத்தி னால்தான் தமிழ்நாடு இன்று உயர்கல்வி வளர்ச்சியில் இந்தியாவின் மாநிலங்களிலேயே முதன்மையாக உள்ளது. மானுட மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்திய மாநிலங்களில் முதல் மூன்று இடங்களில் இடம்பெற்று வருகிறது. இதற்கான காரணம் என்ன என்பதை அறிஞர் அமர்தியா சென்னும் தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜீன் ட்ரெஸ்சும் 2013இல் ஒரு நிலையற்ற வெற்றி-இந்தியாவும் அதனுடைய முரண்பாடுகளும் (An Uncertain Glory : India and Its Contradictions) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளனர். கல்வி, சுகாதாரத் துறைகளில் தமிழ்நாடு அடைந்த வெற்றி, மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சாதனைகளை முறியடிக்கக் கூடியது. குறைந்த காலக்கட்டத்தில் விரைந்த வளர்ச்சியைப் பெற்று கொடுமையான வறுமையும் ஏற்றத்தாழ்வும் இல்லாமல் தமிழ்நாடு உள்ளது. அனைத்துச் சாதிப் பிரிவினரும் பள்ளிக்குச்

செல்லும்வண்ணம் சத்துணவுத் திட்டம் தமிழ்நாட்டில் நிறை வேற்றப்படுகிறது. உறுதியான சமூக அடித்தளம் இதற்குக் காரணமாக அமைகிறது. சமூக உணர்வைத் தூண்டும் பெரியாரின் சமூகச் சீர்திருத்த இயக்கம் ஒரு காரணமாக அமைந்தது (the social reform movement initiated by Periyar is responsible for socially engineered economic growth) என இந்நூலில் இந்த இரு ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டு தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆட்சியில் தந்தை பெரியாரின் பிறந்த நாளான செப்டம்பர் 17, சமூகநீதி நாள், என்று தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் போற்றப் படுகிறது. 2022ஆம் ஆண்டு முதல் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் நாளைச் 'சமத்துவ நாள்' என்று அரசு அறிவித்து விழா எடுக்கிறது.

மாநிலங்கள் தன்னுரிமை பெற்றால்தான் தமிழ்நாட்டிற்கு நிதித்துறையில் இழைக்கப்படும் அநீதி நீக்கப்படும். ஒன்றிய அரசு விதிக்கும் நேர்முக, மறைமுக வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு அதிகமானது. ஒன்றிய அரசிற்கு வரும் வரி வருவாயில் 70 விழுக்காட்டிற்குமேல் 6 மாநிலங்கள் மட்டும் செலுத்துகின்றன.

தமிழ்நாடு அதிக வரியை ஒன்றிய அரசின் நிதித் தொகுப்பிற்கு அளித்தும் தமிழ்நாடு பெறும் நிதி தொடர்ந்து குறைக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிற்கு நிதியியல் நெறிப்படி வரிவருவாயை பகிர்ந்தளித்தால் சமுதாயத்தின் அனைத்து நலிந்த பிரிவினருக்கும் நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசால் தொடர முடியும்; விரிவுபடுத்த முடியும். ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசிற்கு உரிய நிதித் தொகையை அளிக்காமல் இருந்தும் பல நிதிச்சிக்கல்களுக்கு இடையில் மாதந்தோறும் குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமின்றிப் பயணம் செய்வதற்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவுத் திட்டமும் மாணவ மாணவியருக்கு 'நான் முதல்வன்' போன்ற பல சமூக நலத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி மே-சூன்-2024

| | |
|---|---|
| பேரா. மு.திருமாவளவன், சென்னை | 2000.00 |
| து.செ.நிறைமொழி, காட்டுமன்னார்கோவில் | 1000.00 |
| மா.முருகேசன்–அலமேலு, தீத்தாண்டுப்பட்டு | 1000.00 |
| சம்பந்த சிவக்குமார்–பானுமதி, காஞ்சிபுரம் | 1000.00 |
| சுக. முல்லை–சே.சு.வினீத் நாராயணன், திருவள்ளூர் | 500.00 |
| நக்கீரன், சோளிங்கபுரம் | 500.00 |
| க.நாகராசன், அன்னனூர் | 200.00 |

## விசயவினித்ரா-இரா. தம்பி பிரபாகரன் வாழ்க்கை ஒப்பந்த விழா



சீர்காழி தோழர் கருப்பு சட்டை கோ.செயராமன் ஆசிரியர் அவர்களின் தம்பி கோ.விசயகுமார் மேனாள் திமுக நகரத் துணைச் செயலாளர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் இரண்டாவது மகள் விசயவினித்ரா - இரா. தம்பி பிரபாகரன் ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த வரவேற்பு விழா 07.04.2024 ஞாயிற்றுக்கிழமை சீர்காழி கடைக்கண் விநாயக நல்லூர் திருமண மண்டபத்தில் சிறப்புற நடந்தேறியது.

திருமண வரவேற்பு விழாவினைத் தோழர் தம்பி ம. சுப்பராயன், திமுக நகரச் செயலாளர் மற்றும் நகர்மன்ற துணைத் தலைவர் அவர்கள் முன்நின்று நடத்தி வைத்தார்கள். தோழர் முத்து அன்பழகன், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மணமக்களின் சார்பில் தந்தை பெரியாரின் "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற புத்தகம் கலந்துகொண்ட அனைவருக்கும் வழங்கப்பட்டது. தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு, புரட்சியாளர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு ஆகிய நூலினை கோ.மு. கருப்பய்யா மணமக்களுக்கு வழங்கினார்.

மோகன இராகம் இசைக்குழு சிதம்பரம் புல்லாங்குழல் சங்கீத சேவா ரத்தினம் ந. மோகனதாசு அவர்கள் தலைமையில் இசை நிகழ்ச்சி சிறப்புற நடைபெற்றது. மணமக்களின் சார்பில் உரூபா 2000/- 'புதிய சிந்தனையாளன்' இதழுக்கு வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டது.

# ‘குடிஅரசு’ நூற்றாண்டு பார்ப்பனரல்லாதார் சுயமரியாதைக்குச் சமர்புரிந்த ‘குடிஅரசு’!



- சா.குப்பன்

மூடநம்பிக்கைகளில் மூழ்கி-இன்னலிலே துயின்றிருந்தத் தமிழர்களை உலுக்கி விழிப்புறச் செய்திட்ட இடிமுழக்மென-கடவுளால் விதிக்கப்பட்டது இந்தத் துன்ப வாழ்க்கை என வீழ்ந்து கிடந்த ஒடுக்கப்பட்ட மக்களை எழுச்சியுறத் திசை காட்டிய விடிவெள்ளியாய், அறியாமை இருள் நீக்கிடும் செம்பரிதியாய் ‘குடிஅரசு’ உதித்த நாள் 02.05.1925.

பெரியார் 22.11.1925இல் காஞ்சிபுரத்தில் காங்கிரசுக் கட்சியிலிருந்து வெளியேறி இருந்தாலும் ‘பார்ப்னரல்லாதார் சுயமரியாதை இயக்கம்’ 26.12.1926இல் மதுரையில் கொள்கை விளக்கங்களுடன் தோற்றம் பெற்றது. ஆயினும் ‘குடிஅரசு’ தோன்றிய நாளையே பார்ப்பனரல்லாதார் சுயமரி யாதை இயக்கம் தோன்றிய நாளாகக் கொள்ளப்படுகின்றது.

காங்கிரசுக் கட்சியின் கிளர்ச்சியில் ஈடுபட்டதற்காகப் பெரியாரும் அவரது நண்பர் தங்கபெருமாள் பிள்ளையும் 1922இல் கோயமுத்தூர் சிறைவாசத்தின் போது கலந்துபேசி ‘சுயமரியாதையையும், சமத்துவத்தையும், சகோதரத்து வத்தையும் உண்டாக்க குடிஅரசு என்னும் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும்’ என்று தீர்மானித்திருந்தனர். அது போலவே வெளியில் வந்த கொஞ்ச நாள்களுக்குள் ‘குடிஅரசு’ என்று ஒரு வாரப் பத்திரிகையையும் ‘கொங்கு நாடு’ என்று ஒரு மாதாந்திரியையும் நடத்திட அரசிடம் பதிவு செய்துவிட்டதாக குடிஅரசு வெளிவந்து இரண்டு ஆண்டுகள் நிறைவின்போது 01.05.1927 குடிஅரசு இதழின் தலையங்கத்தில் பெரியார் எழுதியுள்ளார்.


குடிஅரசு தொடங்கிய போது அவ்வேட்டின் கொள்கைக் குறிப்பாகத் தலையங்கப் பகுதியில் கீழ்க்காணும் பாடலை வெளியிட்டார்.

அனைத்துயிர் ஒன்றென் றெண்ணி
    அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
    வஞ்சம், பொய், களவு, சூது
சினத்தையும் தவிர்ப்பா யாகில்
    செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதி யான
    உபதேசம் ஆகுந் தானே!

இப்பாடல் சமயச் சார்புள்ளது போலத் தோன்றினாலும் ‘மக்கள் அனைவரும் சமம்’ என்ற பெரியாரின் கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. சரியாக இரண்டு ஆண்டுகளுக்குப் பின் இப்பாடல் இடம்பெறவில்லை. இதேபோல குடிஅரசு முகப்பு அட்டையின் மேற்புறத்தில் வெளியிட்டு வந்த பாரத மாதா, காந்தி நெசவு செய்வது, தொழிலாளர் தொழில் புரிவது முதலான படங்கள் 18.12.1927 இதழுக்குப் பின் இடம்பெறவில்லை.

குடிஅரசு 02.05.1925இல் தொடங்கிய போது பெரியார், திருப்பாதிரிபுலியூர் ஞானியாரடிகளைக் கொண்டு அலுவலகத்தைத் தொடங்கி வைத்திடவும் முதல் இதழை வெளியிடவும் செய்தார். குடிஅரசு தொடங்கிய போது அதன் ஆசிரியர்கள் ஈ.வெ.இராமசாமி மற்றும் வழக்குரைஞர் கருங்கல்பாளையம் வா.மு. தங்கபெருமாள் பிள்ளை ஆகிய இருவர். 1925இலேயே வா.மு. தங்க பெருமாள் பிள்ளை குடிஅரசு ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிவிட்டார். 06.03.1926இல் வா.மு. தங்கபெருமாள் பிள்ளை மறைந்து விட்டார்.

குடிஅரசு முதல் இதழில் திராவிட இயக்கத் தலைவர் பி. தியாகராயர் மறைவுற்ற செய்தி பின் காணுமாறு வெளியிடப் பட்டிருந்தது.




“பார்ப்பனரல்லாதார் கூட்டத்தின் தலைவராக விளங்கிய ஸ்ரீமான் பி. தியாகராய செட்டியார் அவர்கள் 28.04.1925 அன்று இரவு 9.45 மணிக்கு இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தியச் செய்தியைக் கேள்வியுற்று நாம் பெரிதும் வருந்துகிறோம்.”

“அவரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக.” (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் 2009 பதிப்பு, தொகுதி 6, பகுதி 2, பக்கம் 4684).

1928 வரையில் பெரியார் இக்கருத்தில் இருந்தார். 26.11.1928இல் சென்னையில் நடைபெற்ற சீர்திருத்தக் காரர்கள் மாநாட்டில் ஆற்றிய உரை அவருடையச் சிந்தனையில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுவிட்டதைப் பட்டாங்கமாக உணர்த்தியது. (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் 2009 பதிப்பு, பதிப்பாசிரியர் வே.ஆனைமுத்து அவர்களின் முன்னுரை பக்.xliv (44), தொகுதி 1, பகுதி 3).

வேதங்களைக் கண்டிப்பவன் “நாத்திகன்” என்று அழைக்கப்பட்டபடியும், அய்ம்புலன்களுக்குத் தட்டுப்படாமலும் அறிவியல் ஆய்வுக்குப் புலப்படாமலும் உள்ள எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த ஒன்று அல்லது ஒருவர் இருக்க முடியாது; இல்லை; இல்லவே இல்லை என்கிற முடிவின்படியும் ஈ.வெ.இரா. ஒரு கடவுள் மறுப்பாளர்

என்பது திட்டவட்டமான ஒன்றாகும். (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் 2009 பதிப்பு, பதிப்பாசிரியர் வே.ஆனைமுத்து முன்னுரை பக்.xliii (43), தொகுதி 1, பகுதி 3).

குடிஅரசில் கடவுள், மதம், ஆத்மா, மறுபிறவி முதலான மூடநம்பிக்கைகளைப் பெரியார் தொடர்ந்து வன்மையாகக் கண்டித்துள்ளார்.

குடிஅரசு ஆசிரியர் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் எனக் குறிப்பிட்டு வந்தது 18.12.1927க்குப் பின் 25.12.1927 இதழ் முதல் ஆசிரியர் ஈ.வெ. இராமசாமி என இடம்பெற்றது.

தொடக்கத்தில் ஸ்ரீமான் எனப் பயன்படுத்தியது 1927க்குப் பின் திரு, திருமதி, செல்வி எனவும் 20.11.1932க்குப் பின் தோழர், தோழியர் என மாற்றம் பெற்றது.

1928க்கு முன் 'பிராமணர்' என்று வழங்கப்பட்ட சொல் 1928க்குப் பின் 'பார்ப்பனர்' என மாற்றம் பெற்றது.

1932 அக்டோபர் வரை சொற்பொழிவாற்றும் போது விளித்த அக்ராசனர் அவர்களே! அக்ராசனாதிபதி அவர்களே! சகோதரிகளே! சகோதரர்களே! என்பது 17.10.1932 முதல் தலைவர் அவர்களே! தோழர்களே! என மாற்றம் பெற்றது.

கோவில்பட்டியில் 19.06.1927 அன்று 'கோவில்பட்டி திராவிடர் கழகத்தின் 18ஆம் ஆண்டு விழாவில்' பெரியார் தலைமையுரையாற்றினார் என்ற செய்தி 28.08.1927 குடிஅரசு இதழில் வெளியாகியுள்ளது. இதேபோல் திருவாரூரில் 'திராவிடர் கழகம்' என ஓர் அமைப்புச் செயல்பட்டது என்ற செய்தி 22.05.1927 குடிஅரசு இதழில் இடம்பெற்றுள்ளது.

இதுபோன்று பற்பல செய்திகள் அறியக் கிடைக்கும் சுரங்கமாக 99 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்ற குடிஅரசு இன்றளவும் அறிவூட்டிக் கொண்டுள்ளது; உணர்வூட்டிக் கொண்டுள்ளது. குடிஅரசு முதலாவதுத் தொகுதியின் தலையங்கத்தில் பெரியார் குறிப்பிட்டுள்ளதாவது :

"மனித சமூகத்தில் சுயமரியாதை உணர்ச்சியும் சகோதரத்துவமும் தோன்ற வேண்டும். ஒருவன் உயர்ந்தவன், ஒருவன் தாழ்ந்தவன் என்ற எண்ணம் அகல வேண்டும். உலகுயிர் அனைத்தும் ஒன்றெனும் எண்ணம் உதிக்க வேண்டும். வகுப்புச் சண்டைகள் மறைய வேண்டும். மேற்சொன்ன கொள்கைகளைப் பரவச் செய்வதற்காக உழைக்கும் காலத்தில், நம்மைத் தாக்குபவர்களுடைய வார்த்தைகளையாவது நாம் சிறிதளவு பயமின்றி - சினேகிதர், விரோதி என்ற வித்தியாசமில்லாமல் யாரையும் கண்டிக்க நாம் பயப்படப் போவதில்லை."

சாதி ஒழிய வேண்டுமானால் சாதிக்கு ஆதாரமான வருணாசிரம அமைப்பு ஒழிய வேண்டும். சாதியை நிலை நாட்டும் சாதித் தொழிலும் ஒழிய வேண்டும் என்பதோடு - வகுப்புரிமை மக்கள் தொகை எண்ணிக்கை விகிதாசாரப்படி அளிக்க வேண்டும் என்பதாகப் பெரியார் கொண்ட கொள்கை களை மக்களிடம் கொண்டு சேர்க்கவே குடிஅரசு தோற்றம் பெற்றது. எந்த ஒரு நிலைப்பாட்டை பெரியார் மேற்கொள்ள விரும்பினாலும் அதற்கு அவர் கொண்டிருந்த உரைகல் ஒன்றே ஆகும்.

சுயமரியாதைக் கொள்கைக்கு ஆக்கமும், பார்ப்பனரல்லாத மக்களின் சமுதாய இழிவு ஒழிப்புக்கும் நல்வாழ்வுக்கும் ஆதரவும் ஒரு இம்மியளவு அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு இருப்பதாக அவருக்கு எப்போது தோன்றினாலும் அதற்கு முன்னிடம் கொடுத்து எந்த நிலைப்பாட்டையும் மாற்றிக் கொண்டார்.

17.02.1929, 18.02.1929 நாள்களில் செங்கல்பட்டில் நடந்த 'சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு' சாற்றிய செய்திகள் :

1. சுயமரியாதை இயக்கம் 1925இல் தோன்றியது; 2. 1925 முதல் ஈ.வெ. இராமசாமி சகாப்தம் பிறந்தது; 3. நம் தலைவர் ஈ.வெ. இராமசாமி பெரியார்; 4. சுயமரியாதை இயக்கத் தந்தை ஈ.வெ. இராசாமி பெரியார் என்பன வரலாற்றுக்குட்பட்ட பேருண்மைகளாகப் பலராலும் அறியப் பட்டன.

24.08.1929 பிற்பகல் பெரியாரின் புதிய இல்ல மாடியில் சுயமரியாதைப் பயிற்சிப் பள்ளி திறப்பு விழா நடந்தது. அவ்விழாவில் ஆர்க்காடு இராமசாமி முதலியார், ஆர்.கே. சண்முகம் செட்டியார், பெரியார் பங்கேற்றனர். இதுபோன்ற பல நூற்றுக்கணக்கான வரலாற்றுப் பதிவுகளின் கருவூலமாக குடிஅரசு திகழ்கின்றது.

இருக்கும் நிலையை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடன் என இதழாசிரியர் பெரியார் 29.10.1933 குடிஅரசில் 'இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?' என ஆசிரியவுரை எழுதிய தற்காக பிரித்தானிய அரசு 'இராச நிந்தனை' குற்றஞ்சாட்டி விசாரணை நடத்தி 24.01.1934 அன்று பெரியாருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்தது. குடிஅரசு இதழின் வெளியீட்டாளர் என்பதற்காகப் பெரியாரின் தங்கை ச.இரா. கண்ணம்மாளும் கைது செய்யப்பட்டார். குடிஅரசு இதழ் வெளியிட ஓராண்டு தடை விதிக்கப்பட்டது. இதனால் குடிஅரசு 19.11.1933 நாளிட்ட இதழுடன் நிறுத்தப்பட்டது. ஓராண்டுக்குப் பின் 13.01.1935 நாளிட்ட இதழ் முதல் குடிஅரசு மீண்டும் வெளிவரலாயிற்று.

மேற்குறிப்பிட்ட காலத்தில் குடிஅரசு வெளிவராததால், பொது மக்கள் நலம் நாடி புதுக்கருத்தைச் சொல்ல 26.11.1933 முதல் 'புரட்சி' எனும் புதிய வார இதழ், குடி அரசின் கதிரொளியைப் பரப்பியது. 'புரட்சி'யும் 17.06.1934 நாளிட்ட இதழுடன் நிறுத்த நேரிட்டது. மக்களை ஒன்றுசேர்த் திடும் இதழ் பணியை 'பகுத்தறிவு' 26.08.1934 முதல் 06.01.1935 வரை அதாவது குடிஅரசு 13.01.1935இல் மீண்டும் வெளியிடப்படும் வரை தொடர்ந்தது.

06.01.1935 பகுத்தறிவு வார இதழில் எழுத்துச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. இடைநிறுத்தப்பட்டிருந்த குடிஅரசு மீண்டும் 13.01.1935 அன்று வெளிவந்த போது அவ்வேட்டில் தொடங்கி தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் நடை முறைக்கு வந்தது.

மக்கள் எண்ணம் செழித்திட புதுக்கருத்தை ஊற்றி ஊற்றி பார்ப்பனரல்லாத-ஒடுக்கப்பட்ட-உரிமைகள் மறுக்கப்பட்ட

மக்களின் உரிமைக்காக மனிதர்களுக்குள் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என நிலவும் நிலை மாற்றிட 05.11.1949 வரை குடிஅரசு சமர்புரிந்தது.

பின்னர் விடுதலை நாளேடு பெரியாரின் போர்க் கருவியாய் விளங்கியது.

மக்களிடையே சமத்துவம் நிலவ, சமஉரிமைத் தழைக்கச் சமர்புரிந்த குடிஅரசுத் தாங்கிவந்த பெரியாரின் புரட்சிக் கருத்துக்களை கற்போம்! புதியதோர் சமுதாயம் படைப்போம்! வெல்க பெரியாரியம்!

*(இக்கட்டுரைக்கு அடிப்படை பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் நூல் தொகுப்பு 1974, 2009 பதிப்புகளுக்கு பதிப்பாசிரியர் பெரியாரியல் அறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் முன்னுரைகள்)*

## வேலூரில் மே நாள் பேரணி - பொதுக்கூட்டம்



2024 மே முதல் நாள் வேலூரில் தமிழ்நாடு ஜன நாயகப் பொதுத் தொழிலாளர் சங்கம் (ஏ.அய்.சி.சி.டி.யூ.) ஏற்பாடு செய்த மே நாள் பேரணியில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களும் பங்கேற்றனர். ஏ.அய்.சி.சி.டி.யூ. வேலூர் மாவட்டத் தலைவர் ஏ. ஏழுமலை தலைமையில் இ.பொ.க.-மா.லெ. வேலூர் மாவட்டத் தலைவர் மா. சரோசா பேரணியைத் தொடங்கி வைத்தார்.

மேதை அம்பேத்கர் சிலையின் அருகில் இருந்து புறப்பட்ட பேரணி முடிவில், அண்ணா கலை அரங்கம் அருகில் பொதுக் கூட்டம் நடந்தது. பொதுக் கூட்டத்தில் ஏ.அய்.சி.சி.டி.யூ. வேலூர் மாவட்டப் பொதுச் செயலாளர் சீ.அ.சிம்புத்தேவன் தொடக்கவுரையாற்றிட என்.டி.எல்.எப். தோழர் எஸ். சுந்தர், பாலாறு பாதுகாப்பு சமூக விழிப்புணர் இயக்கத் தோழர் க.மு.பரசுராமன், தோழர் ஏ.மாணிக்கம், தி.மு.க. மருத்துவராணி வேலூர் மாவட்டப் பொறுப்பாளர் மரு. தி.ச. முகமது சயி, மா.பெ.பொ.க. சார்பில் சா.குப்பன் ஆகியோர் உரையாற்றினர். ஏ.அய்.சி.சி.டி.யூ. மாநிலச் செயலாளர் தோழர் உ.அதியமான் சிறப்புரையாற்றினார்.

## வடக்கலூர் ந.விசாலாட்சி மறைந்தார்



பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வடக்கலூர் நடேசன்-அஞ்சலை அம்மாள் மருமகளும், ந. இராமலிங்கம் அவர்களின் மனைவியும், அக்ரி. ந.ஆறுமுகம் திருச்சி ந. கருணாகரன் இவர்களின் அண்ணியு மான ந. விசாலாட்சி அம்மையார் 22.5.2024 புதன்கிழமை அன்று மறைவுற்றார், அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்வு மற்றும் படத்திறப்பு 2.6.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று எனது ஊர் வடக்கலூரில் நடைபெற்றது.

தமிழ் நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி துணைப் பொதுச் செயலாளர் தோழர் பி. சுகந்தி படத்தைத் திறந்து வைத்தார். திராவிடர் கழகப் பெரம்பலூர் நகர தலைவர் அக்ரி. ந. ஆறுமுகம், தோழர் ஆளூர் ஷாநவாஸ் ஆகியோர் இரங்கல் உரையாற்றினார்.

அம்மையாரின் மூத்த மகன், வழக்கறிஞர் இரா. ஸ்டாலின் நன்றி உரையாற்றினார். படத்திறப்பு நிகழ்வுக்கு உறவினர்கள் நண்பர்கள் பல்வேறு இயக்க தோழர்கள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி இயக்கத் தோழர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

- செய்தி : **ந.கருணாகரன்**

## தோழர் ஆனைமுத்து நூற்றாண்டு




நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, தடம் மாறாப் பயணம், தளராத உழைப்பு, தடுமாற்றமில்லாக் கொள்கை முழக்கம், அள்ள அள்ளக் குறையாத அறிவு, எதையும் ஆதாரத்தோடு பேசும் புலமை, நூலகங் களையும் ஆவணக் காப்பகங்களையும் அலசிப் பார்க்கும் அறிவுத் தேடல், நாள் கிழமை மாறாமல் வரலாற்றைச் சொல்லும் நினைவாற்றல், ஒளிவு மறைவின்றி உண்மை பேசும் உதடுகள், தன்முனைப்பில்லாத் தோழமை, அறிவொளி, ஆடம்பரமில்லா எளிமை என வாழ்க்கையைத் தனது பண்பாய் இயல்பாய்க் கொண்டவர் பெரியார் சிந்தனைகள் தோழர் வே.ஆனைமுத்து.

- **வேலூர் மு.சுகுமார்**

# மா.பெ.பொ.க.வின் அரசியல் இலக்கு

- வே.ஆனைமுத்து



இந்தியாவில் ஓர் உண்மையான கூட்டாட்சி அமைக்கப் பாடுபடுவதே மா.பெ.பொ.க.வின் அரசியல் இலக்கு ஆகும்.

**இந்த இலக்கை அடைவதற்கான வேலைத் திட்டங்கள்**

1. தாழ்த்தப்பட்டோருக்குத் தனிக்குடியிருப்புகள் இருப்பதை அகற்றித் தாழ்த்தப்பட்டோரும் மற்ற பிரிவினரும் கலந்து குடியிருக்கிற தன்மையில் கலப்புக் குடியிருப்புகளை உருவாக்க வேண்டும். சாதிக்கு ஒரு சுடுகாடு இருப்பதை ஒழிக்க வேண்டும்.
2. நில உச்சவரம்புச் சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து, கிடைக்கும் உபரி நிலம், அரசுப் புறம்போக்கு நிலம் இவற்றை நிலமற்ற ஆதித் திராவிடக் கூலி விவசாயத் தொழிலாளிகளுக்கும், மற்ற வகுப்பிலுள்ள நிலமற்றோருக்கும் கிடைக்கச் செய்யப் போராட வேண்டும்.
3. இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பு மக்களுக்கும் கல்வியிலும், வேலையிலும் விகிதாச்சார இடஒதுக்கீடு வர வழிகாண வேண்டும்.
4. அந்தந்த மாநில எல்லைக்குள் அமைந்து இயங்கும் இந்திய மைய அரசின் அலுவலகங்கள் எல்லா வற்றிலும் அந்தந்த மாநில ஆட்சி மொழியே அலுவல் மொழியாக ஆக்கப்பட வேண்டும்.
5. இந்திய ஆட்சிப் பணி அய்.ஏ.எஸ்., (அய்.பி.எஸ்.) என்பது அடியோடு ஒழிக்கப்பட்டு, ஆட்சிப் பணிப் பொறுப்பு மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இந்தியக் காவல்துறைப் பணி, இந்திய நீதித் துறைப் பணி முதலானவையும் ஒழிக்கப்பட்டு மாநிலங் களிடமே இவை ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. இந்திய உச்சநீதிமன்றம் என்பது உடைக்கப்பட்டு அந்தந்த மாநிலத்திலேயே உச்ச அதிகாரம் படைத்த நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும்.
7. ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனியான அரசியல் அமைப்புச் சட்டம், தனிக்குடியுரிமை, தனிக்கொடி, தனிப் பாதுகாப்புப் படை இவற்றை உள்ளடக்கிய தாக-ஒவ்வொரு மாநிலமும் தன்னுரிமை படைத்த தாக உருவாக்கப்பட வேண்டும்.

இன்று நம்மிடையே உள்ள பெரியார் தொண் டர்கள் இப்புரிதல்களுடன் ஒருங்கிணைவதாலும், சம தர்மவாதிகளும், மார்க்சிய-பெரியாரிய அம்பேத்கரியத் தொண்டர்களும் ஒன்றிணைவதாலும் இன்னும் ஒன்றி ரண்டு தலைமுறைக் காலத்தில் இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற முடியும்.

**எது நமக்கு வெற்றி?**

1. எல்லாத் தரப்பு மக்களுக்கும் ஆண்களுக்கும், பெண் களுக்கும் சிந்திக்கும் ஆற்றலைத் தரும் கல்வி - ஒரே தன்மையிலான கல்வி - இலவசமாகவும், கட்டாயமாகவும் 18 வயது வரை அரசினால் வழங்கப் பட வேண்டும். எல்லா நிலைக் கல்வியிலும், அரசின் அன்றாட நடப்பிலும் இந்து மதம் பிரிக்கப்பட வேண்டும்.
2. 18 வயது நிரம்பிய ஆணுக்கும் பெண்ணுக்கும் - எல்லாத் தரப்பினர்க்கும் குறைந்த அளவு வாழ்க்கை அனுபவிப்பு வசதிக்கான வேலை உறுதியை - உத்தரவாதத்தைக் கட்டாயம் அரசு வழங்க வேண்டும்.
3. எல்லா வகுப்பு மக்களும்-ஆண்களும் பெண்களும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் ஆட்சியிலும் அதிகாரத்திலும் சம வாய்ப்பும் பங்கும் பெற உறுதி அளிக்கிற ஓர் அரசு வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்வளவு உரிமைகளும் மறுக்கப்பட்ட மக்களை அதிக அளவில் கொண்ட இந்தியாவில்-மேலே கண்ட குறிக்கோள்களைக் கொண்ட ஓர் அரசு நம்மால் அமைக்கப்பட்டாலொழிய - பெரியாரின் குறிக்கோளை நாம் என்றும் வென்றெடுக்க முடியாது.

கி.பி.2100இல் இது முடிந்தாலும் அது தான் நமக்கு வெற்றியாகும்.

**வேண்டும் திடமான மொழி உணர்வு**

தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழி, தமிழே வழிபாட்டு மொழி, வீட்டுச் சமயச் சடங்குமொழி என்கிற நிலையை எப்பாடுபட்டேனும் நாம் உண்டாக்கித் தீர வேண்டும்.

இவ்வாறு மானிட உரிமை, வாழ்வுரிமை, மொழி உரிமை, கல்வி பெறும் உரிமை, மருத்துவம் பெறும் உரிமை இவையெல்லாம், எல்லா மக்களுக்கும் வந்து சேர இன்றுள்ள அரசியல் சட்டமோ, ஆட்சி முறையோ கிஞ்சிற்றும் பயன்படாது. இவற்றைத் தூக்கி எறிய வேண்டும் என்கிற திடமான உணர்வு நம்மில் ஒவ்வொருவருக்கும் ஆடவர், மகளிர், இளைஞர், மாணவர் ஆகிய ஒவ்வொருவருக்கும் வந்து தீர வேண்டும்.

**அனைவரையும் அறைகூவி அழைக்கிறேன்**

தனியுடைமையை ஒழித்து சமதர்ம முறையை ஏற்றுக்கொள்ளும் அரசு-எல்லார்க்கும் கல்வி, வேலை, மருத்துவம் இவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்க உறுதி தரும் அரசு என்ற இத்தன்மையுள்ள அரசை அமைப்பதை நோக்கி மக்களை அழைத்துச் செல்வதே பெரியார் கொள்கை என்றேனும் ஒரு நாள் வெற்றி பெற வழியாகும்.

எனவே, பெரியார் நிறுவிய கொள்கைகளை வரித்துக் கொண்ட நாம்-மற்றும் மார்க்சிய லெனினியக் கொள்கை கொண்ட கட்சியினர் அமைப்பினர், ஊரறிந்த பொதுவுடைமைக் கட்சியினர், அம்பேத்கரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டவர்கள் ஆகிய அனைவரும் ஒன்றிணைந்து மார்க்சிய-லெனினிய-பெரியாரிய-அம்பேத்கரியக் கொள்கைகள் இந்தியாவில் வெற்றி பெற ஏற்றதோர் அரசை அமைக்கப் பாடுபடுவோம் வாரீர் என அன்புடன் அறைகூவி அழைக்கிறேன்.

# ஆவடியில் பாவேந்தர், கால்டுவெல் பிறந்தநாள் விழா




தந்தை பெரியார் திராவிடர் கழகம் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் கால்டுவெல் பிறந்தநாள் விழா தமிழ் அறிஞர்களுக்கு பாராட்டு விழா ஆவடி முத்தமிழ் மன்றத்தில் 19.5.2024 மாலை 5 மணி அளவில் நடைபெற்றது.

வரவேற்புரை தோழர் மரம் பத்மநாபன் ஆற்ற தோழர் ஆவடி நாகராசன் தலைமை உரையாற்ற தமிழ் வழிக் கல்வி இயக்கத்தின் தலைவர் தோழர் ஆ.சி.சின்னப்ப தமிழர் தொடக்க உரையாற்ற பேராசிரியர் மணிக்கோ பன்னீர்செல்வம் பாவேந்தர் பாரதிதாசனின் சமூகப் பார்வை என்ற தலைப்பிலும் தோழர் வாலாசா வல்லவன் கால்டுவெல்லின் தமிழ் தொண்டு என்ற தலைப்பிலும் வழக்கறிஞர் கு.ஞா.பகத்சிங் அறமன்றத்தில் தமிழ் என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்கினார்கள் கழகத்தின் தலைமை நிலைய செயலாளர் மூத்த வழக்கறிஞர் வை.இளங்கோவன் தமிழ் அறிஞர்களை பாராட்டி நினைவு பரிசு சான்றிதை பண முடிப்பு வழங்கி பாராட்டி பேசினார்.

இதில் திராவிடர் கழகத்தின் ஆவடி மாவட்ட தலைவர் தோழர் கார்வேந்தன் தமிழர் விடுதலைக் கழகத்தின் தலைவர் செள சுந்தரமூர்த்தி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகரத் தலைவர் தோழர் மயில்வாகனன் தமிழ் வழி கல்வி இயக்கத்தின் மாநில பொருளாளர் தோழர் த. மணிசேகரன் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் காஞ்சி மாவட்ட தலைவர் தோழர் கண்ணதாசன் புரட்சிகர இளைஞர் முன்னணியின் தோழர் வள்ளுவன் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்கள் இறுதியாக அம்பத்தூர் நகர செயலாளர் தோழர் செல்வராஜ் அவர்கள் நன்றியுரை கூறி விழா இனிதே நிறைவு பெற்றது.

# தீவட்டிப்பட்டியில் தீண்டாமைத் 'தீ'



- க. முகிலன்

"கோயிலினுள் நுழைவதற்கு இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக் கொள்ளுங்கள்; சாதி இந்துக்கள் மனம்மாறும் வரை காத்திருங்கள் என்று தீண்டப்படாத மக்களுக்குச் சமாதானம் சொல்லுவோரின் கருத்தைச் சற்றும் ஏற்க இயலாது. 1929 திசம்பர் 31க்குள் இந்தியா வுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டும் என்று இந்தியத் தேசிய காங்கிரசு பிரிட்டிஷ் நாடாளுமன்றத் துக்கு ஒரு காலக்கெடு கொடுத்துள்ளது. அவ்வாறிருக்கும் போது கோயிலில் நுழைவதற்கான - மிகச் சாதாரண மான மானுட உரிமையைப் பெறுவதற்குக் கூட தீண்டப் படாத வகுப்பு மக்கள் இன்னும் காத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது?" என்று புரட்சியாளர் அம்பேத்கர் எழுப்பிய வினா இந்தியா சுதந்தரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பின்னும் நீடிக்கும் பெருங்கொடுமை நிலவுகிறது.

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி அருகில் உள்ள தீவட்டிப்பட்டியில் மாரியம்மன் கோயில் சித்திரைத் திருவிழாவில் 1.5.2024 அன்று கோயிலுக்குள் செல்ல முயன்ற தலித்துகளைச் சாதி இந்துக்கள் தடுத்து நிறுத்திய தால் தகராறு ஏற்பட்டது. தீவட்டிப் பட்டியில் பிற்படுத்தப் பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 500 குடும்பங்கள் உள்ளன. தீவட்டிப்பட்டியை அடுத்துள்ள நச்சினாம்பட்டியில் 200 தலித் குடும்பங்கள் உள்ளன. இவ்விரு ஊர்களுக்கும் நடுவில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் 1972இல் அறநிலையத் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டது.

மே 2 அன்று மாரியம்மன் கோயிலின் தேரோட்டம் நிகழவிருந்த நிலையில், காலங்காலமாக தலித்துகள் கோயிலுக்கு வெளியிலிருந்துதான் வழிபடுவது வழக்கம் என்று கூறி சாதி இந்துக்கள் தலித்துகளைக் கோயிலுக்குள் நுழையவிடாமல் தடுத்தனர். இதையறிந்துவந்த அற நிலையத் துறையினர் மாரியம்மன் கோயிலைப் பூட்டி சீல் வைத்தனர்.

அடுத்த நாள், காடையாம் பட்டி வட்டாட் சியர் அலுவலகத்தில் வருவாய்த்துறை, அற நிலையத்துறை, காவல்துறை ஆகியவற்றின் அதிகாரிகள் சாதிஇந்துக்கள், தலித்துகள் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். "தாங்கள் கோயிலுக்குள் சென்று வழிபடு வதற்கு அனுமதி இல்லாத போது இக்கோயி லுக்கு வெளியே உள்ள கடைகளை மூட வேண்டும்" என்று தலித்துகள் கடைகளின் பெயர்ப்பலகைகளை இழுத்துப்போட்டு நொறுக்கினர். இதையறிந்த சாதி இந்துக்கள் திரண்டு வந்தனர். காவல்துறையினரும் வந்தனர். சாதி இந்துக்கள் தலித்துகள் மீது கற்களை வீசித்தாக்கினர். இக்கல வரச் சூழலில் கடைகளுக்குத்தீ வைக் கப்பட்டது. தலித்துகள் இதைச் செய்ததாகச் சொல்லப் படுகிறது. காவல்துறையினர் தலித்துகளை பெண்கள், முதியோர் என்றும் பாராமல் கடுமையான முறையில் தடியடி நடத்தி அவர்களை விரட்டியடித்தனர். தீயணைப்பு ஊர்தி விரைந்து வந்து தீயை அணைத்ததால் 5 கடைகள் மட்டுமே எரிந்தன. இந்த மோதலில் இரு தரப்பிலும் 19 பேரைக் காவல்துறையினர் கைது செய்தனர்.



கடந்த ஆண்டு மேல்பாதி கிராமத்தில் கோயிலில் தலித்து இளைஞர்கள் நுழைய முயன்ற போது தாக்கப் பட்டனர். சாதி இந்துக்களுக்கும் தலித்துகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டு கோயில் கதவு பூட்டப் பட்டது. இதேபோன்று தமிழகத்தில் பல ஊர்களில் கோயில்கள் பூட்டப்பட்டுள்ளன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு 19இன்படி இந்தியக் குடிமகன் எவருக்கும் தான் விரும்பும் மதத்தை நம்பவும், பின்பற்றவும், வழிபடவும், பரப்பவும் உரிமை உண்டு. ஆனால் கிராமங்களில் பல்வேறு பெயர்களில் உள்ள அம்மன் கோயில்கள், அய்யனார், கருப்புசாமி, முனியசாமி, சுடலைமாடன் போன்ற நாட்டார் தெய்வ வழிபாடு நடக்கும் கோயில்கள் ஆகியவற்றில் பெரியார் மண் என்று பெருமை பேசும் தமிழ்நாட்டில் தலித்துகள் வழிபட முடியாத அவலநிலை நீடிப்பது ஏன்?

சமஉரிமைச் சிந்தனையும் சமத்துவ உணர்ச்சியும் மக்களிடம் ஏற்படவிடாமல் தடுக்கின்ற சாதியக் கட்டமைப்பே இதற்குக் காரணமாகும். அரசமைப்புச் சட்டத்தில் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது குற்றச் செயல் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் தீண்டாமை காரணமாக கோயில் நுழைவு உரிமையை மறுப்பது மட்டுமின்றி தலித்துகள் மீது எண்ணற்ற இழிவுகளும்,

பாலியல் வன்கொடுமைகளும் நாள்தோறும் நிகழ்த்தப் பெறுகின்றன.

கடந்த 75 ஆண்டுகளில் கல்வி, வேலை வாய்ப்பு, வருவாய், வாழ்க்கைத்தரம் முதலானவை உயர்ந் துள்ளன. ஆனால் எந்தவொரு சாதிப் பிரிவினரிடமும் சாதி உணர்ச்சி ஒழியவில்லை. ஒவ்வொரு சாதியும் தன்னளவில் ஒரு மூடிய சமூகமாகவே இருக்கிறது என்றார் அம்பேத்கர். அதனால்தான் இன்றளவும் இந்துக்களில் தன்சாதிக்குள்ளாகவே திருமணம் நடக்கும் நிலை இருக்கிறது. இதை மீறுவோர் ஆணவக் கொலை செய்யப்படுகின்றனர். அந்த அளவிற்குச் சாதி உணர்ச்சி சமூகத்தில் புரையோடிச் சீழ்பிடித்துள்ளது. நம்முடைய கல்வி முறை சாதி உணர்ச்சியை ஒழித்து, சமத்துவச் சிந்தனையை ஊட்டுவதாக இல்லை.

தீவட்டிப்பட்டி மாரியம்மன் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் அரசும் நிர்வாகமும் முன்னெச்சரிக்கையுடன் செயல் பட்டிருக்க வேண்டும் என்று சில நாளேடுகள் அறிவுரை கூறியுள்ளன. சாதி ஆணவப்படுகொலைகள் நிகழும் போது இதைவிட இன்னும் உரத்துப் பேசுகின்றன. ஆனால் தீண்டாமைக் கொடுமைக்கும் சாதிய மோதல் களுக்கும் மூல ஆதாரமாக இருக்கும் இந்து மதத்தை ஊடகங்களோ, மற்றவர்களோ கேள்விக்குட்படுத்து வதில்லையே ஏன்? இந்துமதம் நால்வருணக் கோட் பாட்டை-சாதியப் பாகுபாட்டை-சாதியின் பெயரிலான உயர்வுதாழ்வை எப்படி ஒழிக்க முடியும்?

**இதை அம்பேத்கர் பின்வருமாறு கூறுகிறார்: “இந்து மதத்தில் சமத்துவமின்மை ஒரு மதக் கோட்பாடாக இருக்கிறது. இது உணர்வுபூர்வமாக நடைமுறையில் பின்பற்றப்படுகிறது. புனிதமான கோட்பாடு என்று பரப்புரை செய்யப்படுகிறது. இந்த சமத்துவமின்மை இந்து மதத்தின் அதி காரப்பூர்வமான கோட்பாடாக இருப்பதால் இதை வெளிப்படையாகப் பரப்புவதில் யாரும் வெட்கப் படுவதில்லை. இந்து மதத்தில் சமத்துவமின்மை மதக்கோட்பாட்டின் மூலம் புனிதமானதாகவும் வாழ்வியல் நெறியாகவும் இருக்கிறது. எனவே சமத்துவமின்மை இந்து மதத்தின் ஆன்மாவாகவே உள்ளது (Inequality is the Soul off Hinduism)” அம்பேத்கர் தொகுப்பு நூல் 3 (ஆங்கிலம்).**

சுதந்தர இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தில் இந்துமதத்தின் சமத்துவமின்மை பாதுகாக்கப்பட்டுள்ளது. எனவேதான் பெரியார் 1957இல் சாதி ஒழிப்புக்கு அரசமைப்புச் சட்டத்தில் பாதுகாப்பு அளிக்கும் விதிகளை எரிக்கும் மாபெரும் போராட்டத்தை நடத்தினார்.

இந்து மதத்தில் சமத்துவமின்மைக் கோட்பாடு நீடிக்கும் வரையில் தீவட்டிப்பட்டியில் நிகழ்ந்தது போன்ற சாதியப் பாகுபாடுகளும், மோதல்களும் தொடரும் என்பதே கசப்பான உண்மையாகும்.

## திட்டக்குடி வழக்குரைஞர்-கவிஞர் அ.பழநியாண்டி அவர்களின் ‘நினைவுகளின் நிழலில்’ கவிதை நூல் வெளியீட்டு விழா




04.05.2024 அன்று சென்னை இராயப்பேட்டை யில் திட்டக்குடி வழக்கரைஞர்-கவிஞர் அ.பழநியாண்டி அவர்களின் “நினைவுகளின் நிழலில்” நூல் வெளியீட்டு விழா நிகழ்வுற்றது.

சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா அவர்கள் நூலை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். நூலின் முதல் படியைப் பெற்றுக்கொண்ட காவல்துறை இயக்குநர் க.வன்னியபெருமாள் இ.கா.ப. அவர்கள் முன்னிலையுரை ஆற்றினார்.

திட்டக்குடி ஓய்வுபெற்றத் தமிழாசிரியர் புலவர் வை.இளைவரசன் வரவேற்புயையும் ‘தடயம்’ மாத இதழாசிரியர் பாபு அறிமுகவரையும் ஆற்றினர். விழாவில் பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் க.அறிவொளி அவர்களும் மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகப் பொருளாளர் மா.செந்தில்குமார் அவர்களும் வாழ்த்துரையாற்றினர்.

நூலாசிரியர் வழக்குரைஞர் அ.பழனியாண்டி அவர்கள் ஏற்புரையாற்றினார். காட்டுமன்னார் கோயில் தில்லை முகவாண்மை உரிமையாளர் தி.துரைசித் தார்த்தன் நன்றியுரையாற்றினார். ப.ம.அதியமான், ப.ம.மதியொளி ஆகியோர் வந்திருந்தோரை உப சரித்தனர்.



### தோழர் ஆனைமுத்து 100

மானுடம் உள்ளவரை

பெரியாரியம் வாழும்!

பொரியாரியம் உள்ளவரை

தோழர் ஆனைமுத்து வாழ்வார்!

**நூல் அறிமுகம்**

# தமிழ் மறவர்

## கீழமாளிகை வை. பொன்னம்பலனார் வரலாறு




தந்தை பெரியாரால் 'தமிழ் மறவர்' என்ற விருது வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்டவரும் பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார், சிலம்பொலி சு. செல்லப்பன், கவிஞர் பொன்னடியான், செம்மொழி க.இராமசாமி முதலானோர்க்குத் தமிழாசிரியராக விளங்கியவருமான கீழமாளிகை வை.பொன்னம்பலனாரின் (30.01.1904 - 02.12.1973) வாழ்க்கை வரலாற்றை, அவரது மகள் செந்தமிழ்க்கொற்றி அவர்கள் எழுதித் தமிழ் மறவர் மறைந்த 50 ஆண்டு நிறைவில்-2023 திசம்பரில் வெளியிட்டுள்ளார்.

**பொன்னம்பலனார் வாழ்க்கையில் முதன்மை நிகழ்வுகளில் சில :**

1926-31 ஆண்டுகளில் திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டப் படிப்பின்போது மறைமலை அடிகளின் மகன் மறை. திருநாவுக்கரசும் பொன்னம்பலனாரும் ஒரே அறையில் தங்கிப் படித்ததனால் நண்பர்களாயினர். இந்த நட்பின் காரணமாகப் பொன்னம்பலனார் ஒவ்வொரு ஆண்டும் கோடை விடுமுறையில் மறைமலை அடிகளார் இல்லம் சென்று, அங்கேயே இருந்து மறைமலை அடிக ளாரிடம் இலக்கணமும் இலக்கியமும் கற்றார். இத்தொடர்பி னால் விளைந்த தனித்தமிழ்ப் பற்றின் காரணமாக 'கனகசபை' என வடமொழியில் இருந்த தம் பெயரை 'பொன்னம்பலம்' எனத் தமிழாக்கிக் கொண்டார்.

புலவர் படிப்பு முடிந்து, சேலம் மாவட்டம், வேலூரில் கந்தசாமி கண்டர் அறக்கட்டளை இந்து உயர்நிலைப் பள்ளியில் 1931 முதல் 1946 வரை தமிழாசிரியராகப் பணியாற்றினார். அப்போது, இந்து செகண்டரி பாடசாலை என்றிருந்த பெயரை, வை. பொன்னம்பலனாரின் முயற்சியினால் 1936இல் "கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளி" என மாற்றிட ஏற்பாடு செய்தார்.

பாவேந்தரின் மூத்த மருமகன் கண்ணப்பன் அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். வேலூரில் உள்ள தம் மகளைப் பார்ப்பதற்காக அவ்வப்போது வரும் பாவேந்தரும் பொன்னம்பலனாரும் கண்டு அளவளாவி நண்பர்களானார்கள். பாவேந்தரை விட 13 அகவை இளையவரான பொன்னம்பலனாரின் நட்பினால் வடமொழிக் கலப்பின்றி பாவேந்தர் எழுதிடலானார்.

1939 வரை சிவனியராக விளங்கி, நெற்றியில் திருநீறுப் பூசிக்கொண்டு, தேவாரம் பாடிக் கொண்டிருந்த பொன்னம்பலனார், 1940இல் பெரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்டும் குடிஅரசு இதழைப் படித்தும் தன்மானப் பகுத்தறிவுக் கொள்கை உரவோரானார்.

வேலூர் கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளியில் 1942-46 ஆண்டுகளில் கல்வி கற்ற பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து. வை. பொன்னம்பலனாரின் நேயம் மிக்க மாணவரானார்.

கந்தசாமி கண்டர் உயர்நிலைப் பள்ளியில் 15 ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றிய பொன்னம்பலனாரை அப்பள்ளி நிர்வாகம் பணிவிலக் கம் செய்துவிட்டது. இதனால் 1947இல் சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந் தார். அப்போது ஞா.தேவநேயப் பாவாணர் சேலம் நகராண்மைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரிய ராகப் பணியில் சேர்ந்தார்.

**பொன்னம்பலனாரின் கொள்கை உறுதி**

1952இல் சேலத்தில் இருந்து மாற்றலாகி முசிறி மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியில் சேர்ந்தார். இந்தப் பள்ளியில் காலையில் கடவுள் வாழ்த்துப் பாடுவது வழக்கம். 10.11.1952 அன்று காலையில் ஒரு மாணவர் பாரதியாரின் "வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்" என்ற பாடலைப் பாடினார். அப்பாடலின் அடுத்த அடி, "ஆரிய நாட்டினர் ஆண்மையோடு இயற்றும் சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக" என்ற வரியைக் கேட்டவுடன் பொன்னம்பல னார் 'பாடாதே நிறுத்து' எனக் குரல் கொடுத்தார். தலைமை ஆசிரியர் குப்புசாமி அய்யர் 'டேய், ஃபூல்' என்று சொன்னார். இதற்குத் தலைமை ஆசிரியர் மன்னிப்புக் கோர வேண்டும் என்றார் பொன்னம்பலனார். மாணவர்கள் 'தமிழாசிரியர் வாழ்க' என முழக்கமிட்டனர்.

அடுத்த நாள் 11.11.1952 அன்று தமிழாசிரியருக்கு பணிநீக்க ஆணை வந்தது. இதை அறிந்த மாணவர்கள் ஊர்வலம் நடத்தினர். இதனால் இச்செய்தி தமிழ்நாடு முழுவதிலும் அறியப்பட்டது. பணிநீக்கத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தீர்ப்பு வந்து மீண்டும் தமிழ் மறவர் பணியில் சேர 23 மாதங்கள் கடந்தன. பணியில் சேர்ந்த பின்னரே 23 மாதங்களுக்கு உரிய சம்பளம் கிடைத்தது.

**'தமிழ் மறவர்' விருது**

சேலம் தமிழ்ப் பேரவையினர் 28.07.1957 அன்று நடத்திய நிகழ்வில் வை. பொன்னம்பலனாருக்கு "தமிழ் மறவர்" என்ற விருதும் ஞா. தேவநேயப் பாவாணருக்கு "திராவிட மொழிநூல் ஞாயிறு" என்ற விருதும் தந்தைப் பெரியாரால் வழங்கி பெருமைப்படுத்தப்பட்டனர்.

இதுபோல் தமிழ் மறவர் வாழ்வில் நிகழ்ந்த பல செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மறைமலை அடிகளார் மற்றும் பெரியார் தொடர்புடைய நிகழ்வுகள் குறிப்பிடத்தக்கவையாகும். சென்னைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர், தமிழறிஞர் டாக்டர் பொற்கோ அவர்கள் இந்நூலுக்கு அருமையான அணிந்துரை வழங்கியுள்ளார்.

பக்கங்கள் 112. விலையிடப்படவில்லை.

**செந்தமிழ் வெளியீடு**
402, ஜெம் குடியிருப்பு, கலெக்டர் நகர்,
அண்ணா நகர் மேற்கு விரிவு,
சென்னை-600 101. பேசி : 98400 02363

**- சா.குப்பன்**

# நரேந்திர தபோல்கர் கொலை வழக்கில் சாரமற்றத் தீர்ப்பு நீதி கிடைப்பது எப்போது?

- கவின்

LDராத்திய மூடநம்பிக்கை ஒழிப்பு அமைப்பின் (MANS) தலைவரும் சாதி ஒழிப்புப் போராளியும் அறிஞரு மான மருத்துவர் நரேந்திர தபோல்கர் 20.08.2013 அன்று அவரது ஊரான புனேயில் நடைப்பயிற்சியின் போது காலை 7.20 மணிக்குத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 10.05.2024 அன்று புனே சிறப்பு அமர்வு நீதிமன்றம் இருவருக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

இந்தக் கொலையைத் திட்டம் தீட்டி செயல்படுத்த மூளையாகச் செயல்பட்டவன் 'இந்து ஜனஜாக்ருதி சமிதி' (HJS) என்ற வலதுசாரி அமைப்பின் கிளை அமைப்பான 'சனாதன் சன்ஸ்தா' அமைப்பின் மேற்கு மண்டலத் தளபதியான வீரேந்திர சிங் தவாடே என்ற மருத்துவர். தபோல்கர் கொலையில் மட்டுமல்ல 20.02.2015 அன்று கோல்காபூரில் சுட்டுக் கொல்லப் பட்ட எழுத்தாளர், செயற்பாட்டாளர், பொதுவுடைமை யாளர், பகுத்தறிவாளர் கோவிந்த் பன்சாரே கொலை யிலும் மூளையாகச் செயல்பட்டவன் வீரேந்திர தவாடே ஆவான்.

தபோல்கர் மற்றும் கோவிந்த் பன்சாரே கொலை களிலும் 20.08.2015 அன்று தார்வாடில் கன்னட மொழி அறிஞர் - பேராசிரியர் எம்.எம். கல்புர்கி சுட்டுக் கொல்லப்பட்டதிலும் 05.09.2017 அன்று பெங்களூருவில் பத்திரிகையாளரும் பகுத்தறிவுச் செயற்பாட்டாளரு மான கவுரிலங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டதிலும் ஈடுபட்டவர்கள் சனாதன் சன்ஸ்தா அமைப்பைச் சேர்ந்த வர்கள். நால்வரின் கொலைகளும் திட்டமிட்டு ஒரே மாதிரியில் செயல்படுத்தப்பட்டவை ஆகும். இந்த நான்கு கொலைகளிலும் தொடர் இழையாகச் செயல்பட்ட வழக்குரைஞரான சஞ்சீவ் புனாலேகரும் இவருடைய உதவியாளரான விக்ரம் பாவேவும் ஆவர்.

தபோல்கர் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப் பட்டவர்களுள் சச்சின் அண்டூர் என்ற இளைஞருக்கும் சரத் கலாஸ்கர் என்ற இளைஞருக்கும் அவர்கள் தான் சுட்டவர்கள் என ஆயுள் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. மேலே கூறிய முக்கிய குற்றவாளிகளான வீரேந்திர சிங் தவாடேவும் சஞ்சீவ் புனாலேகரும் விக்ரம் பாவேவும் குற்றமிழைத்தது, நீதிமன்றத்தில் போதிய சான்றுகளுடன் மெய்ப்பிக்கப்படவில்லை என வழக்கி லிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தபோல்கர் கொல்லப்பட்டு 10 ஆண்டுகள் 8 மாதங்கள் ஆன பின் அளிக்கப்பட்டுள்ளத் தீர்ப்பு அரை-குறையானதே.



இந்த வழக்கில் நீதி கிடைக்க மற்ற குற்ற வாளிகளும் தண்டிக் கப்படும் வகையில் மேல் முறையீடு செய்யவுள்ள தாக இதுவரை இடை விடாது நீதிமன்றங் களை நாடிய தபோல் கரின் மகள் முக்தாவும் மகன் அமீதும் கருத் துத் தெரிவித்துள்ளனர்.

இந்த அரை-குறைத் தீர்ப்பும் எளிதில் கிடைத்து விடவில்லை. பொது மக்கள் அழுத்தத்தாலும் தபோல் கரின் மகள் முக்தாவும் மகன் அமீதும் மும்பை உயர் நீதிமன்றத்தில் முறையிட்ட பின்னரே 09.05.2014இல் நடுவண் புலனாய்வு அமைப்பினர் குற்றப் புலனாய்வு செய்திட உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. நடுவண் புலனாய்வு அமைப்பு (CBI) புலனாய்வு மேற்கொண்டால் முழுமையாகவும் காலங்கடத்தப்படாமலும் உண்மைகள் கண்டறியப்படும் என நம்புவதும் ஒரு மூடநம்பிக் கையே என ஆகிவிட்டது.

நடுவண் புலனாய்வுக் குழு புலனாய்வில் அக்கறைக் காட்டவில்லை என மும்பை உயர்நீதி மன்றத்தில் முக்தா தபோல்கரும் அமீதும் முறையீடு செய்தனர். இதனால் 16.12.2016இல் உயர்நீதிமன்றம் புலனாய்வின் மோசமானப் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்தது. மீண்டும் ஒருமுறை மும்பை உயர்நீதி மன்றத்தில் முக்தாவும் அமீதும் முறையிட்டதனால், விசாரணை பற்றிய அறிக்கை அளித்திடுமாறு 09.04.2023 அன்று உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. இடையில் கைது செய்யப்பட்ட சஞ்சீவ் புனாலேகரையும் விக்ரம் பாவேவையும் பிணையில் விடுவித்ததற்கு எதிராக முக்தாவும் அமீதும் உயர்நீதி மன்றத்திலும் உச்சநீதி மன்றத்திலும் முறையீடு செய்தது பயனற்றுப் போனது.

**சாரமற்ற தீர்ப்பு : எதனால்?**

தபோல்கர் கொலைக்கு மூளையாகச் செயல்பட்ட வீரேந்திர சிங் தவாடேவும் இந்தக் கொலையில் முக்கியமான சஞ்சீவ் புனாலேகரும் விக்ரம் பாவேவும் தண்டனையளிக்காமல் தப்பவிடப்பட்டுள்ளனர். நரேந்திர தபோல்கரைச் சுட்டதை நேரில் பார்த்தவர்கள் கூறியபடி,

சுட்டவர்களான வினய்பவாரும் சாரங் அகோல்கரும் தலைமறைவாகிவிட்டனர் என புலனாய்வில் தெரிய வந்தது என புலனாய்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். தலைமறைவானவர்களை நடுவண் புலனாய்வுக் குழுவினரால் பத்தாண்டுகளில் கண்டுபிடிக்க முடிய வில்லை என்பது நம்பும்படியாகவா உள்ளது? இதற்கு மாறாக எம்.எம். கல்பூர்கி கொலை வழக்கில் கர்நாடகக் காவல் துறையினரால் 18.08.2018இல் கைது செய்யப் பட்ட சச்சின் அண்டூருக்கும் சரத் கலாஸ்கருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது குளறுபடியாகத் தோன்றவில்லையா?

**நீதி கிடைப்பது எப்போது?**

நரேந்திர தபோல்கரின் மகள் முக்தாவும் மகன் அமீதும் இத்தீர்ப்பில் நீதியில்லை என மேல் முறையீடு செய்தாலும் 10 ஆண்டுகளாக தலைமறைவாக உள்ள குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது எப்போது? நீதி கிடைப்பது எப்போது? என்கின்ற வினாக்கள் எழுகின்றன.

மூடநம்பிக்கைகள் ஒழிய வேண்டும், உயர்சாதியி னர் ஆதிககம் அகற்றப்பட வேண்டும், இந்து சனாதன நடைமுறைகள் தகர்க்கப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்திற்காக நூல்கள் எழுதியும், பருவ இதழ்களில் எழுதியும், மக்கள் கூட்டங்களில் பேசியும் வந்த செயற் பாட்டாளர்கள் நால்வரைக் கொன்றழித்துள்ள சனாதன் சன்ஸ்தா போன்ற அமைப்புகளுக்கு ஆட்சியில் இருப்ப வர்களும் நிர்வாகத் துறைகளில்-காவல் துறையில்-புலனாய்வு அமைப்புகளில் உள்ளவர்களும் ஆதரவாகச் செயல்படும் நிலை நிலவுகின்றது என்பது இந்த வழக்கின் விசாரணைப் போக்கின் மூலம் உறுதியாகின்றது. இந்நிலை மாற சனாதன பழைமைவாத நடைமுறை களைக் காப்பாற்றிடும் அமைப்புகளின் கோட்பாடுகளை மக்களிடையே செல்வாக்கிழக்கச் செய்திட சமத்துவத் திற்காகப் போராடும் இயக்கங்கள் வலுவாகச் செயல்பட வேண்டியது இன்றைய இன்றியமையாதத் தேவையாகும்.


## கவின்-ஆர்த்தி மன்றல் விழா



ஆவடி நாகராசன்- சாந்தி இணையரின் மகன் கவின் மற்றும் காரைக்கால் இரகுராம் -சித்ரா இணையரின் மகள் ஆர்த்தி ஆகிய இருவரும் காரைக்கால் சக்தி திருமண மண்டபத்தில் 22.4.24 அன்று வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். முன்னாள் 21.4 .24 மாலை வரவேற்பு விழா நடைபெற்றது. விழாவில் சீர்காழி தோழர் முத்து அன்பழகன் தன் குடும்பத்தாரோடு கலந்துகொண்டு சிறப்பித்தனர். மற்றும் நண்பர்கள் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை ஆவடி வள்ளுவர்-வாசுகி திருமண மண்டபத் தில் வரவேற்பு விழா நடைபெற்றது. வரவேற்பு விழாவில் அய்யா ஆனைமுத்து குடும்பத்திலிருந்து மூத்த மருமகன் புதுச்சேரி சீனு .அரிமா பாண்டியன் ஆ.தமிழ்செல்வி, மகன் ஆ.வெற்றி பங்கேற்றனர். திரைப்பட நகைச்சுவை நடிகர் தாமு, தோழர்கள் இரா.பச்சைமலை, பெரியார்-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளை செயலாளர் கலையரசு, பா.வை.அருண் மொழி, வடிவேல், திருக்கழுக்குன்றம் தி.ச.குணசேகர், காஞ்சிபுரம் மு.செயப் பிரகாசு, தொல்காப்பியன், தாம்பரம் சுப்பிரமணி, வழக்கறிஞர் கஸ்தூரி, வழக்கறிஞர் சே.வீனித், மருத்துவர் முல்லை, படப்பை உஸ்மான் இதயவண்ணன் மற்றும் நண்பர்கள் உறவினர்கள் வாழ்த்தினர். விழாவின் மகிழ்வாக புதிய சிந்தனையாளன் இதழ் வளர்ச்சி நிதியாக ரூபாய் 1000 வழங்கப்பட்டது.

## வெகு மக்களைச் சுரண்டுவதும் அடக்கியாளுவதும் எப்படி முடிகிறது?



மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் வாழப் பிறந்தவன்; மனிதனாக வாழ உரிமை உடையவன். அவனை இன்னொரு மனிதன் அடக்கி ஆளுவது எப்படி முடிகிறது? அவனது உரிமைகளைப் பறித்து, அடக்கி, அடிமைப்படுத்திச் சுரண்டுவதால்தான். இந்தத் தனிமனிதச் சுரண்டலும் அடக்கி ஆளுதலும் ஒரு வலிமை மிக்க இயந்திரத்தின் வழியாகவே திறமையாகச் செய்யப்படுகிறது. அந்த வலிமை மிக்க இயந்திரமே அரசு. அந்த அரசின் இயங்கு கருவியே நிருவாக அமைப்பு. அதன் கொலைக்கருவியே படை. அதன் வீச்சுச் சாட்டையே நீதித் துறை. அதன் எடுபிடிகளே இலக்கியம், சமயம், சாதி, கடவுள் எல்லாம். இத்தனைக் கருவிகளையும் கொண்டு இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்தியாவிலும் தமிழகத்திலும் உழைப்பாளிகளான வெகுமக்கள் சுரண்டப்படுகிறார்கள்.

**- வே.ஆனைமுத்து**

“மண்டல் குழு அறிக்கை மக்கள் நாயக உரிமைப் போர்” நூலிலிருந்து

# பெரியாரியல் சுடரொளி!



- க. முகிலன்

தொண்ணூற்று ஆறு ஆண்டுகள் பெருவாழ்வு வாழ்ந்த ஆனைமுத்து தன் இயக்கத்தை சமீபத்தில் நிறுத்திக் கொண் டார். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக அவருடன் இயக்கப் பணிகளில் நெருங்கிப் பழகிய என்னைப் போன்றோருக்கு அது சொல்லொணா இழப்பு.

பெரம்பலூர் மாவட்டம், முருக்கன்குடி என்ற ஊரில் பிறந்தவர். ஊரில் ஒரு முறை ஆற்றில் குளித்துவிட்டு வருகையில் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் என்கிற திராவிட இயக்கத் தலைவர் விமான விபத்தில் இறந்த செய்தி கிடைத்து தன்னுடன் படித்த பிராமணத் தோழன் குதூகலித்ததைப் பார்த்து அதன் பின்னணியை ஆராயத் தொடங்கியதாகக் குறிப்பிடுவார். அதன் பின்னர் அவர் பெரியார் பக்கம் ஈர்க்கப்படுகிறார். அத்துடன் வன்னியர் சங்கப் பணிகளிலும் இளமையில் ஈடு பட்டார். இராமசாமி படையாச்சியாரின் உழைப்பாளர் கட்சியின் அரசியல் பணிகளில் ஆர்வம் காட்டினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இண்டர்மீடியட் படித்த போது முதல் ஆண்டில் கணிதத்தில் தேர்ச்சி பெற வில்லை. இதையடுத்து, "சென்னைப் பச்சையப்பன் கல்லூரி யில் வந்து சேர்ந்துகொள்ளலாம்" என ஆனைமுத்து நினைக்க, "ஆங்கிலத்தில் முதலாவதாக வந்த மாணவனாயிற்றே!" என பல்கலைக்கழகமே அவரை இரண்டாவது ஆண்டு படிக்க அனுமதித்தது. ஆனாலும் ஆனைமுத்துவின் ஆர்வம் சமூகத்தொண்டின்பால் திரும்பிவிட்டது. 1952 முதல் 1956 வரை 'தென்னாற்காடு மாவட்ட மணிலா மார்க்கெட் கமிட்டி' என்கிற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எழுத்தராகவும் கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்து பதவியைத் துறந்தார். 1956க்குப் பின்னாக முழுக்க திராவிடர் கழகத்தில் செயல்பட்டார்.

அறுபதுகளில் பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் பிறந்த நாள் விழா வரும்போது மாட்டு வண்டி கட்டிக் கொண்டு அதில் ஒலிபெருக்கியுடன் ஒரு மாதம் முழுக்க ஊர் ஊராகச் செல்வார். எல்லா ஊரிலும் கூட்டம் உண்டு. அரிசி, பருப்பு போன்றவற்றை எடுத்துச் சென்று கூட்டம் போடும் ஊரில் இருக்கும் ஏழைத் தாய்மார் வீட்டில் கொடுத்து சமைத்துத் தரச்சொல்லி சாப்பிடுவார்கள்.

தந்தை பெரியாரை ஒரு கட்டத்தில் எல்லோரும் வழி பாட்டுக்குரிய தலைவராகக் காண ஆரம்பித்தக் காலக்கட்டத்தில் அவருடன் விவாதம் செய்து கொண்டிருந்தவர் ஆனைமுத்து மட்டுமே.

பெரியார் "இந்துக்கள் என்று நம்மை அழைத்துக் கொள்ளாமல் பகுத்தறிவாளர், நாத்திகர் என்று போட்டுக் கொள்ள வேண்டும்" எனக் கூறினார். ஆனால், அவரைச் சந்தித்த ஆனைமுத்து "அப்படி போட்டுக்கொள்வது என்பது சாத்தியமே இல்லை. நமது சட்டங்கள் அதை எப்போதும் அனுமதிக்காது!" என வாதிட்டார். பெரியார் இந்தக் கருத்தை பல வழக்கறிஞர்களிடம் கேட்டு உறுதிப்படுத்தி "ஆனைமுத்து சொல் வதே சரி!" என்று ஏற்றுக் கொண்டார்.

எழுபதுகள் வரையில் பெரியாரின் பேச்சுகள், எழுத்துகள் சிறுசிறு நூல்களாக மட்டுமே இருந்தன. பெரியாரை அறிந்துகொள்வதற்கு தொகுப்பு நூல் எதுவும் அதுவரை இல்லை. பல்வேறு இதழ்களில் இருந்த அவரது எழுத்துகள் தேடி எடுக்க வேண்டிய நிலையில் இருந்தன. இந்நிலையில் பெரியாரின் எழுத்தையும் பேச்சையும் நூலாக்க ஆனைமுத்து விரும்பினார். எனவே, அவரது அனுமதியுடன் அவற்றைத் தொகுக்க முனைந்தார். 'குடியரசு', 'விடுதலை' என பல இதழ்களில் இருந்தவற்றைத் தலைப்பு வாரியாகப் பிரித்து திருச்சியில் இருந்த பெரியார் அவர்களிடம் வாசித்துக் காட்டி ஒப்புதல் பெற்றார். பெரியாரின் முதல் துணைவியார் நாகம்மை மரணம் அடைந்த போது அவர் விடுத்த இரங்கல் செய்தி எவ்வளவு உருக்கமானது என்பதை அனைவரும் அறிவர். அந்தச் செய்திக் கட்டுரையைப் பெரியாரிடம் ஆனைமுத்து வாசித்துக் காட்டிய போது இரண்டு வரிகளைக் கேட்டபின் முழுக் கட்டுரையையும் அப்படியே பெரியார் கலங்கிய கண்களுடன் ஒப்பித்திருக்கிறார்!



*பெரியார் ஈ.வெ.ரா.சிந்தனைகள் நூல் வெளியிட பதிப்புரிமைக்கு பெரியார் ஒப்பம் இடுகிறார்*

ஆனைமுத்துவுக்கு ஏழு மகவுகள். அறுவர் உயிர் வாழ் கின்றனர். பெற்ற பிள்ளைகளுக்குப் பெயர்கூட ஆனைமுத்து வைத்தது இல்லை! எல்லாம் அவரது துணைவியாரே பார்த்துக்கொள்ள விட்டுவிட்டு, ஆனைமுத்து மாநிலம் முழுக்க பெரியாரின் கொள்கைகளைப் பரப்ப ஓயாமல் நடையாய் நடந்தார். எந்தப் பகுதியாக இருந்தாலும் பேருந்திலேயே போய்விடுவார். கையில் இரண்டு பெரிய புத்தகப் பைகளை வைத்திருப்பார். யார் கேட்டாலும் தராமல் அவரே சுமந்து வருவார்.

பணம் இல்லையே என்பதற்காக எந்தச் செயலையும் செய்வதில் சுணங்கமாட்டார். எதையும் முடிக்க வேண்டும் என்று நினைத்தால் எப்பாடு பட்டாவது நிறைவேற்றியே விடுவார். எவ்வளவு பெரிய முரடனாக இருந்தாலும் எதிர்த்து நிற்க அவர் தயங்கமாட்டார். பொதுவாழ்வில் அவர் தாக்கு தல்களை எதிர்த்தாக்குதல்களால் முறியடித்த காலகட்டமும், கத்தியைப் பாதுகாப்புக்கு வைத்திருந்த காலமும் உண்டு.

பெரியாரின் எழுத்துகளைத் தொகுத்ததன் மூலம் பெரியாரியலில் மேலும் செழுமை பெற்றார். ஏற்கெனவே அவர் தமிழ் இலக்கியங்களை ஆழக் கற்றவர் தொல்காப் பயித்தை எழுத்தெண்ணிப் படித்தவர். இந்திய அரசியல் சட்டத்தை நாளெல்லாம் துப்பறியும் நாவலைப் படிப்பதைப் போல் ஆர்வமுடன் படிப்பார். உலக நாடுகளின் அரசியல் சட்டங்களையும் படித்திருந்தார். அரசியல் சாசன அவையில் அம்பேத்கர் தலைமையிலான குழு நமது அரசியல் சாச னத்தை உருவாக்கிச் சமர்ப்பிக்கும் முன்பாக நாடாளுமன்றச் செயலராக இருந்த பி.என். ராவ் என்ற அதிகாரி, மாதிரி அரசியல் சாசனம் ஒன்றைத் தயாரித்திருந்தார். இதை யொட்டித்தான் இந்திய அரசியல் சட்டமே தயாரிக்கப்பட்டது.

புதுடெல்லியில் தேசிய ஆவணக் காப்பகத்திலிருந்து பி.என். ராவ் எழுதிய சட்டத்தை நகலெடுத்து வைத்து இருந்தார். அதுமட்டுமல்லாமல் சென்னை மாகாணத்தை ஆண்ட நீதிக்கட்சியினர் டெல்லி ஆங்கில அரசிடம் சென்னை மாகாணத்தில் உள்ள மத்திய அரசுப் பணிகளில் இடஒதுக்கீடு பெறுவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய ஆவணங்களையெல்லாம் அங்கிருந்து நகலெடுத்து வைத் திருந்தார். ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி தேசிய ஆவணக் காப்பகத்தில் பல ஆவணங்களைத் தேடி எடுத்தவர். அவரிடம் பேசுகையில், ''நான் எந்த ஆவணங்களைத் தேடி எடுத்தாலும் எனக்கு முன்பாக அவற்றைப் படித்தவர்கள் பட்டியலில் ஆனைமுத்துவின் பெயரையும் பார்த்திருக் கிறேன்'' என்று வியந்து கூறினார்.

பெரியாரின் எழுத்துகளையும் பேச்சுகளையும் தொகுத்தது ஆனைமுத்துவின் ஒரு முதன்மையான பங்களிப்பு என்றால் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டுக்காகத் தனி ஒருவராகப் போராடியது இன்னொரு முக்கிய பங்களிப்பு.

காகா கலேல்கர் தலைமையில், நேரு முதலாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தை அமைத்தார். 1955-இல் அதன் அறிக்கை அவரிடம் அளிக்கப்பட்டது. அதை அவர் அமல்படுத்தவில்லை. இது இந்தியா முழுக்க இருக்கும் பிற்பட்டோருக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான வாய்ப்பு இருந்தும் மத்திய அரசு செய்யாதிருக்கிறது என்பதை உணர்ந்த ஆனைமுத்து, 1978இல் எந்தப் பின்புலமும் இல்லாத சாதாரணமாக மூன்று தோழர்களை மட்டும் கூட்டிக்கொண்டு டெல்லிக்குச் சென்றார். அங்கே குடியரசுத் தலைவர் உள்ளிட்ட பலரை இதற்காகச் சந்தித்தார். பீகார் மக்களவை உறுப்பினர் இராம் அவதேஷ் சிங்கின் நட்பு கிடைக்க, அவருடன் இணைந்து வடஇந்தியாவில் இதற்காக ஓர் அமைப்பை உருவாக்கிப் பாடுபட்டார்.

அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய். 1977-இல் ஜனதா கட்சித் தேர்தல் அறிக்கையில் ''காகா கலேல்கர் அறிக்கையை அமல்படுத்துவோம்'' எனக் குறிப்பிட்டிருந்தது. இதைத் தொடர்ந்து மொரார்ஜி தேசாயை நேரில் சந்தித்த ஆனைமுத்து, சேலம் சித்தையன், இராம் அவதேஷ் சிங் ஆகியோர் இந்த ஆணையப் பரிந்துரைகளை அமல்படுத்தக் கோரினர்.

மொரார்ஜி தேசாயோ ''ஓர் ஆணையத்துக்குப் பத்து ஆண்டுகள்தான் காலம் உண்டு'' என்று புறம்தள்ள முயன்றார். ''1955-இல் கொடுக்கப்பட்ட பரிந்துரைகள் 1978-இல் காலாவதி ஆகிவிட்டன'' என்று அவர் சொல்ல, ''அப்படியெனில், ஏன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டீர்கள்?'' என வாதிட்டனர்.

இதைத் தொடர்ந்து பி.பி. மண்டல் தலைமையில் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் 1979-இல் உருவாக்கப்பட்டது! இந்த ஆணையம் உருவாக்கப்படு வதற்கு முன்பே மண்டலை ஆனைமுத்து சந்தித்து, பிற்படுத் தப்பட்டோர் இடஒதுக்கீடு குறித்து வலியுறுத்தி இருந்தார்!

1980-இல் இந்த ஆணையம் அறிக்கை கொடுத்தாலும், பின்வந்த காங்கிரஸ் அரசுகள் அதைக் கிடப்பில் போட்டன. 1990-இல் பிரதமர் வி.பி. சிங் மண்டல் ஆணையப் பரிந்துரைகளின்படி பிற்படுத்தப்பட்டோருக்கு மத்திய அரசுப் பணிகளில் 27 சதவீதம் இடஒதுக்கீட்டை அமல்படுத்த ஆணை பிறப்பித்தார். இதற்கு இடைப்பட்ட ஆண்டுகளில் ஆனைமுத்து தன் நேரத்தை வடஇந்தியாவில் இதற்கான அழுத்தம் கொடுக்கும் பணிகளிலேயே செலவிட்டுக் கொண்டிருந்தார் என்பது இங்கே குறிப்பிட வேண்டிய முக்கியத் தகவல்! தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடு இருந்த இடஒதுக்கீடு 50 விழுக்காடாக எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் உயர்த்தப்படுவதற்கும் முக்கியக் காரண மாக இருந்தவர் ஆனைமுத்து!

கட்சிப்பணி மற்றும் 'சிந்தனையாளன்' இதழுக்காக பல இரவுகள் அவருடன் அலுவலகத்தில் தங்கிப் பணிபுரிந்துள்ளேன். விடியற்காலை இரண்டு மணிமுதல் காலை ஏழு மணிவரை கட்டுரைகள் எழுதுவார். பிறகு அவற்றை உரக்கப் படிப்பார்! ''காதும் கேட்க வேண்டும் தோழர், அப்போதுதான் அதில் தவறுகள் இருந்தால் தெரியும்!'' என்பார்.

திட்டமிட்டு இயக்க மாநாடுகள் பல நாட்கள் நடத்துவார்! மாநாடு முடிந்ததும் சில நாட்கள் ஓய்வெடுக்கலாம் என நினைக்கமாட்டார். மறுநாள் காலையே வேறு பணியைத் திட்டமிட்டு வைத்திருப்பார்! கிளம்பிப் போய்விடுவார்! சமூகத் தொண்டையே முழுநேரப் பணியாக வைத்திருந்த அவருக்கு இயற்கையால் மட்டுமே ஓய்வைத் தர முடிந்துள்ளது!

*(க. முகிலன், அம்பேத்கரிய, பெரியாரிய, மார்க்சிய சிந்தனையாளர் நமது செய்தியாளரிடம் கூறியதிலிருந்து)*
*கட்டுரை : பெரியாரியப் பேரறிஞர்*
*தோழர் வே. ஆனைமுத்து நினைவலைகள், மே 2021*

# மானுட மாண்புகளை சீர்குலைக்கும் மூடவழக்கத்தை மீட்கும்
# நீதிமன்றத் தீர்ப்புகளை விமர்சிப்போம்!



நா. மதனகவி

சென்னை உயர்நீதிமன்றம், மதுரைக் கிளையில் பி. நவீன்குமார் என்பவர் 22.04.2024 அன்று தொடுத்த வழக்கினை எட்டு நாட்களில் விசாரணையை நிறைவு செய்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், 30.4.2024 அன்று தீர்ப்பை ஒத்தி வைத்து, 17.05.2024 அன்று அறிவித்தார்.

அவ்வழக்கு என்னவெனில், கரூர் மாவட்டத்தில் உள்ள நெரூரில் 110 ஆண்டுகளுக்குமுன் இறந்துவிட்ட சதாசிவ பிரம் மேந்திரர் என்பவரின் நினைவு நாளில் ‘சோற்றுக்கொடை’ வழங்குவது வழக்கம். அப்படி வழங்கப்படும் உணவை உண்டவர்களின் எச்சில் வாழை இலைகள் மீது புரள்வதால் நல்லவை நடக்கும் என மூடநம்பிக்கையாளர்கள் அந்த எச்சில் இலைகள் மீது புரள்வதும் வழக்கமாயிருந்தது. இவ்வழக்கம் மனித மாண்புகளை இழிவுபடுத்துவதாக உள்ளது என, அதனைத் தடைசெய்திடக் கோரி 2015இல் தலித் பாண்டியன் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

மேற்சொன்ன வழக்கை விசாரித்து, அந்த வழக்கம் மனித வாழ்வின் மேன்மையை-கண்ணியத்தை இழிவு படுத்தும் செயல் என நீதிபதி எஸ். மணிகுமார் 27.04.2015 அன்று தடைசெய்துத் தீர்ப்பளித்தார். இத்தீர்ப்பின் காரணமாக நெரூரில் நடக்க இருந்த பிரம்மேந்திரரின் 101ஆம் நினைவு நாளில் எச்சில் இலைகளில் புரளும் நிகழ்வு நிறுத்தப்பட்டது. அப்போது முதல் 9 ஆண்டுகளாக எச்சிலைகளில் உருள்வது கைவிடப்பட்டது.

கர்நாடக அரசு மற்றும் சிலர் எதிர் ஆதிவாசிப் பழங் குடியினர் பாதுகாப்புப் பேரவை (ஆதிவாசி புதகட்டு ஹிதரக்ஷன் வேதிகெ) வழக்கில் நெரூரில் போலவே தட்சிணக் கருநாடக மாவட்டத்தில் குக்கே சுப்பிரமணியர் கோவிலில் ஒரு சாரார் உண்ட எச்சில் இலைகள் மீது புரளும் வழக்கத்திற்கு உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் ஆயம் 12.12.2014 அன்று தடை ஆணை பிறப்பித்ததை நீதிபதி எஸ். மணிகுமார் வழங்கியத் தீர்ப்புரையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

**நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் தீர்ப்பு**


நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் 17.05.2024 அன்று தீர்ப்புரையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். மணிகுமார் 27.04.2015இல் அளித்தத் தீர்ப்பு செல்லாது; எச்சில் இலைகளின் மீது புரள்வது அவர்களின் நம்பிக்கை மற்றும் தனி மனிதர் அடிப்படை உரிமை. எனவே பி. நவீன்குமார் கோரியபடி நெரூரில் எச்சிலைகளின் மீது புரளலாம் என இவ்வாண்டு பிரம்மந்திரர் நினைவு நாளுக்கு முந்திய நாள் தீர்ப்பு வழங்கினார். மேலும் தட்சிண கர்நாடகா குக்கே நிகழ்ச்சியை நெரூர் நிகழ்ச்சியுடன் ஒப்பிட முடியாது என்றும் 12.12.2014இல் குக்கே வழக்கில் உச்சநீதிமன்றம் தடை ஆணைதான் வழங்கியுள்ளது; நிலுவையில் உள்ள அவ்வழக்கில் இறுதித் தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை என்றும் நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன், அவரது தீர்ப்பில் கூறியுள்ளார்.

**தீர்ப்புக்கு எதிரான விமர்சனம்**

பி. நவீன்குமார் தொடுத்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் எதிர் தரப்பு வாதுரைக்கு வாய்ப்பே அளிக்கவில்லை. இந்த வழக்கை விசாரித்து தீர்ப்புரைப்பதில், வழக்கிழந்த மூடநம்பிக்கை நடைமுறையை மீட்டெடுப்பதில் ஆர்வமும் வேகமும் காட்டப்பட்டுள்ளது.

பிறர் உண்ட எச்சில் இலைகள் மீது புரள்வது மானுட நாகரிக வாழ்வின் மேன்மையையும், மாண்பையும், கண்ணி யத்தையும் சீரழிக்கின்ற செயல்.

அரசமைப்புச் சட்டம் பிரிவு 15ஏ(எச்)இல் கூறப்பட்டுள்ள வாறு குடிமக்களின் அறிவியல் மனப்பான்மையை வளர்த்தல் என்பதற்கு எதிரானது.



அதே நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி வழங்கியத் தீர்ப்பை வேறு ஒரு நீதிபதி (ஜி.ஆர். சுவாமிநாதன்) செல்லாதென அறிவிப்பது நீதித்துறையின் நெறிமுறைதானா?

உச்சநீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் (நீதிபதி மதன் பி. லோகுர் மற்றும் நீதிபதி ஆர். பானுமதி) ஆயம் அளித்துள்ளது தடை ஆணை - இறுதித் தீர்ப்பன்று என்பதனால் அதனை ஏற்காதது சரியா?

9 ஆண்டுகளாக நடைபெறாத ஒரு சனாதன வழக்கத்தை மீட்டெடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்தில் நெறிமுறை களைவிட, நீதியைவிட மத உணர்ச்சியே மேலோங்கி நிற்பது வெட்டவெளிச்சமாகத் தெரிகின்றதல்லவா?

மனித மாண்புகளையும் கண்ணியத்தையும் காக்க வேண்டும் எனும் முற்போக்காளர்கள் கண்டிக்க வேண்டிய தீர்ப்பல்லவா இது?

கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகப் போராடு வோம்! நீதியை நிலைநாட்டுவோம்!

# அதிகாரத்தைக் கேள்வி கேட்ட அறிஞர் வே. ஆனைமுத்து



- வெற்றிச்செல்வன்

**த**னது வாழ்நாள் முழுவதிலும் அதிகார மையத்தை நோக்கித் தொடர்ந்து கேள்வி எழுப்பிக் கொண்டே இருந்தவர் வே. ஆனைமுத்து. அதிகாரம் ஓரிடத்தில் குவித்து வைக்கப்படுவதைக் கண்டித்ததோடு, அதிகாரப் பரவலாக்கத்தை வலியுறுத்தி அவரது வாழ்நாள் முழுவதும் போராடினார். தந்தை பெரியாரின் மாணாக் கராக அவருக்கு அக்கலை இயல்பாகவே பயிற்று விக்கப்பட்டிருந்தது.


தந்தை பெரியார் முன்னெடுத்த அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, 18 மாதங்கள் சிறைப்பட்டார் ஆனைமுத்து. ஆனால் அந்தப் போராட் டத்தினைத் தொடர்ந்து முன்நகர்த்திச் செல்ல என்ன முயற்சியை எடுத்தோம் என்ற கேள்வியை பெரியாரின் 132வது பிறந்த நாளிலும் பற்றிக் கொண்டு முன்வைக் கிறார்.

நால்வருண ஏற்பாட்டையும், பழைய பழக்க வழக்கச் சட்டங்களையும், ஆகம விதிகளையும் பாதுகாக்கிற விதிகள் 13, 25, 372 ஆகியவற்றை அரசமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்குங்கள் என்று கோரியே 26.11.1957-இல் அரசமைப்புச் சட்டத்தின் இந்தப் பகுதிகளை மட்டும் அச்சிட்டு எரிக்கச் செய்தார் பெரியார். நால்வருணம், பழக்க வழக்கம், ஆகமம் இவற்றைப் பாதுகாக்கும் சட்டத்தை 53 ஆண்டுகளுக்கு முன் எரித்தோம். அதன் காரணமாக, அச்சட்டப்பகுதியை நீக்குகிற முயற்சியில் எத்தனை தப்படி முன்னேறி யிருக்கிறோம்? (சிந்தனையாளன் தலையங்கம் செப். 2010).

அதுமட்டுமன்று, இவற்றின் பாதுகாப்பை அப்படியே வைத்துக் கொண்டு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டமும், சுயமரியாதைத் திருமணச் சட்டமும் எந்த அளவுக்குப் பயன்படும் என்றும் வினா எழுப்புகிறார். எப்போது வேண்டுமானாலும் ஆபத்து வரலாம் என்ற அவரது கேள்வி நியாயமானதுதானே?

அதனோடு ஒரு முக்கியமான கோரிக்கையையும் அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு விடுக் கிறார். தமிழ்நாட்டில் ஓர் ஆண்டு முழுவதும் நடக்கின்ற சுயமரியாதைத் திருமணங்கள், இந்துத் திருமணங்கள் குறித்த புள்ளிவிவரம் இனியாவது தொகுக்கப்பட வேண்டும் என்பதே அது.

ஒற்றை ஆட்சி முறையைத் தொடர்ந்து எதிர்த்தும், இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் பிரச்சினை யைப் பற்றிப் பேசியும் எழுதியும் வந்தவர் ஆனைமுத்து. அவரது உரைகள் தொகுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் Federalism in Peril என்ற நூலாக வெளிவந்தன. அரசியலமைப்பின் துணைகொண்டும், உயர்சாதியி னர் ஆதிக்கம் செலுத்தும் நீதிமன்றங்களைத் துணையாகக் கொண்டும் ஒன்றிய அரசு தொடர்ந்து அச்சுறுத் தலை மேற்கொண்டு வருவதைச் சுட்டிக் காட்டி, அனைவரும் ஒன்றிணைந்து அதிகாரத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்வது நமது இன்றியமையாத கடமையாகும் என்று இந்நூலில் ஆனைமுத்து அழைக் கிறார். பன்மைத்துவம் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் அவர் காட்டிய உறுதியை இந்நூலின் மூலம் அறிந்து கொள்ளலாம்.



மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டதைக் கடுமையாக எதிர்த்த ஆனைமுத்து, மாநில அரசு ஒரு படிப்புத் துறையை மாநிலத்தில் அறிமுகப்படுத்துவதும், தலைமை ஆசிரியர் பதவிக்குத் தகுதிகாண் தேர்வு, மருத்துவப் படிப்பில் சேருவதற்கான தகுதிகாண் தேர்வு, மருத்துவப் படிப்பில் தேறிய பின்னர் மருத்துவராகப் பதவி ஏற்றிட ஒரு தகுதித் தேர்வு என அடுக்கடுக்காகத் தகுதித் தேர்வுகள் என்பதும் 100-க்கு 85 விழுக்காட்டுப் பேராக உள்ள பிற்படுத்தப்பட்ட நாட்டுப்புற ஏழை மக்களுக்குப் பின்ன டைவே ஆகும் (சிந்தனையாளன் 01.10.2018) என்பது அவரது ஆணித்தரமான கருத்து.

தோழர் ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு தொடங்கும் இந்த வேளையில், அவருடைய கூட்டாட்சி, இடஒதுக்கீடு தொடர்பான சிந்தனைகள் அதிகமாக விவாதிக் கப்படவும், மக்களிடையே பரவலாக்கப்படவும் வேண்டும். அறிவுச் சமூகமாக தமிழ்ச்சமூகம் மலர, தமிழர் உரிமை பெற அவருடைய கனவுகள் நனவாக்கப்பட வேண்டும்.

# நியூஸ் கிளிக் - பிரபீர் புர்காயஸ்தா சிறை வைப்பு செல்லாது என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு வரவேற்புக்குரிய முன்மாதிரித் தீர்ப்பு

- கவின்

பா.ச.க. மோடி அரசு உழவர் நலன்களுக்கு எதிராக 2020 செப்டம்பரில் நிறைவேற்றிய 3 வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெற்றிடக் கோரி, 2020-21இல் ஓராண்டு நான்கு மாதங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட போராட்டங்களை நியூஸ் கிளிக் வலைதள ஊடகம் விரிவாக ஒளிபரப்பியது. இதுபோல் மோடி அரசுக்கு எதிராக நிகழும் பல செய்திகளையும் அச்சமின்றி ஒளிபரப்பி வந்தது.

இதனால் எரிச்சலடைந்த மோடி அரசு, பழிதீர்க்கும் நடவடிக்கையாக அவ்வூடகத்தின் நிறுவனரும் முதன்மை யாசிரியருமான பிரபீர் புர்காயஸ்தாவை ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் கீழுள்ள தில்லி காவல்துறை யினரை ஏவி 03.10.2023 அன்று சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் கைது செய்து சிறையிலடைத்தது. பிரபீர் புர்காயஸ்தா இந்த வழக்கில் நீதி வேண்டி உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி சந்தீப் மேத்தா ஆகிய இருவர் அடங்கிய அமர்வு 15.05.2024 அன்று தீர்ப்பு அளித்துள்ளது. அத்தீர்ப்பில், கைது செய்த போது அதற் கான காரணத்தை பிரபீர் புர்காயஸ்தாவுக்கு முறைப்படி எழுத்து மூலம் தெரிவிக்காமல், கள்ளத்தனமான முறையில் கைது செய்தது சட்ட விரோதமானது எனவும் உபா (UAPA)வின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தது செல்லாது எனவும் அறிவித்தனர்.

இத்தீர்ப்பு வரவேற்புக்குரிய சிறப்புமிக்க முன்மாதிரித் தீர்ப்பு ஆகும்.

### வழக்கு, தீர்ப்பு - ஒரு சுருக்கப் பார்வை

தில்லி காவல்துறை நியூஸ் கிளிக் பிரபீர் புர் காயஸ் தாவை 03.10.2023 அன்று கைது செய்து, அவருடைய வழக்குரைஞர் மூலம் வழக்காடும் வாய்ப்பைத் தடுக்கும் நோக்கத்தில்-அவருடைய வழக்குரைஞருக்குத் தெரிந்து விடக் கூடாது என்பதற்காகவே 04.10.2023 புலர்காலை 6 மணிக்கு பாட்டியாலா நீதிமன்ற அமர்வு நீதிபதி 2இன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, சிறையில் அடைக்க உத்தரவுப் பெற்று, சிறையில் அடைத்தது, தில்லி காவல்துறை.

கைது செய்ததற்கான காரணத்தை பிரபீர் புர்காயஸ் தாவுக்கும் தெரிவிக்கவில்லை; அவருடைய வழக்குரைஞர் ஆர்ஷ்தீர் குரானாவுக்கும் தெரிவிக்கவில்லை. தில்லி காவல்துறையினர் ஆர அமர இட்டுக்கட்டிய குற்றச் சாட்டுகள் அடங்கிய முதல் தகவல் அறிக்கை (FIR) இன் நகலை 05.10.2023 அன்று, அதாவது சிறையி லடைக்கப்பட்டு 24 மணி நேரத்திற்குப் பிறகு அவருக்கு அளித்தனர்.



பிரபீர் புர்காயஸ்தா

அவர் பிணை பெறுது விடக்கூடாது என்பதற்காக ''இந்திய ஜனநாயக முறைக்கு மாற்றாக சீனாவில் உள்ளது போல் ஒரு கட்சி அரசு முறையை ஏற்படுத்துவதற்காக சீன அரசாங்கத்திட மிருந்து புர்காயஸ்தா நிதி பெற்றார், சதி செய்தார்'' என அருவருக்கத்தக்க கற்பனையான குற்றச்சாட்டு புனையப்பட்டது.

பா.ச.க. நரேந்திர மோடி அரசு சுதந்திரமாகச் செயல்படும் செய்தி ஊடகங்களையும் ஊடகவியலாளர் களையும் ஒடுக்குவது, ஜனநாயக விழுமியங்களை அரித்தழிக்கும் செயலே ஆகும்.

பிரபீர் புர்காயஸ்தாவை கைது செய்ததற்கான காரணத்தை அவருக்குத் தெரிவிக்காததனால் அவருடைய வழக்குரைஞர் மூலமாக சிறையில் அடைப்பதை (remand) எதிர்க்கும் வாய்ப்பும், பிணை கோரும் வாய்ப்பும், காவல்துறையினர் பொறுப்பில் வைத்து விசாரிப்பதை எதிர்க்கும் வாய்ப்பும் மறுக்கப்பட்டுள்ளது. இது சட்டத்தையும் நீதித் துறையையும் ஏமாற்றும் செயல் ஆகும் எனத் தீர்ப்புரையில் நீதிபதிகள் கூறி யுள்ளனர்.

'காவல் துறையினரின் மேற்கூறியச் செயலைக் கள்ளத்தனமானது; சட்டத்தை ஏமாற்றும் தந்திரச் செயல்' என உச்சநீதிமன்றம் தில்லி காவல் துறையி னரைக் குற்றஞ்சாட்டியுள்ளது.

'உபா' (UAPA)இன் பிரிவு 43பி(1)இன்படி கைதுக்கான காரணத்தைக் கைதாளருக்குத் தெரிவித்தல் வேண்டும் என்பது இவ்வழக்கில் மீறப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் குடிமக்களுக்குப் பிரிவு 22(1)லும் 22(5)லும் வழங்கப்பட்டுள்ள மீறக்கூடாத உரிமைகளும் மீறப் பட்டுள்ளது. இதனால்தான் உச்சநீதிமன்றம் பிரபீர் புர்காயஸ்தாவை கைது செய்தது செல்லாது எனத் தீர்ப்புரைத்துள்ளது.

பிரபீர் புர்காயஸ்தாவைக் கைது செய்ததை எதிர்த்தும் சிறையிலடைத்திட அமர்வு நீதிபதி அளித்த உத்தரவை எதிர்த்தும் தில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக் கப்பட்டது. இவ்வழக்கினை (வழக்கு எண்.7278/ 2023) விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி துஷாத் ராவ் கெடலா, குற்றச்சாட்டுகளின் தன்மை கடுமையானவை என்பதால் கைது செய்ததும் சிறையிலடைக்க அமர்வு நீதிமன்றம் உத்தரவளித்ததும் சரியானவை எனக் கூறி, வழக்கை 23.10.2023 அன்று தள்ளுபடி செய்து விட்டார்.

உயர்நீதிமன்றம் அளித்த இத்தீர்ப்பின் மேல்முறை யீட்டில் உச்சநீதிமன்றம் 15.05.2024 அன்றையத் தீர்ப்பில், உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தீர ஆராயாமல் அளிக்கப்பட்டுள்ளது என ஒதுக்கித் தள்ளியது.

மேலும் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பில் பண மோசடித் தடுப்புச் சட்டத்தின் (PMLA) பிரிவு 19(1)ம் சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (UAPA) பிரிவு 43மி(1)ம் ஒரே கருத்துடையவை ஆகும். எனவே பணமோசடித் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டவரான பங்கஜ் பன்சால் எதிர் இந்திய ஒன்றியம் வழக்கில் 03.10.2023 அன்று உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பு ‘உபா’ (UAPA) கைதிற்கும் பொருந்தும் என பிரபீர் புர்காயஸ்தா வழக்கில் உச்சநீதிமன்றம் 15.05.2024 அளித்தத் தீர்ப்பு இனி வருங்காலத்தில் உபா (UAPA) வின்கீழ் கைது செய்தலுக்கும் பொருந்தும் என்பதா லேயே இது சிறப்பு மிக்க முன்னோடி - முன்மாதிரித் தீர்ப்பு என வரவேற்கிறோம்.


## தோழர் வே.ஆனைமுத்துவின் தேடல்



தில்லியில் உள்ள தேசிய ஆவணக் காப்பகத்தில் E.V.Ramasamy என்ற பெயரிட்ட ஒரு கோப்பு உள்ளது. அதில் "ஈ.வெ.இரா. இப்போதும் சமுதாய பொதுவுடமைக் கொள் கையையே(Socio-Communism) பரப்புரை செய்கிறார். அவர் சீனாவுக்குச் செல்ல அனுமதிக் கப்பட்டால், ஏற்கனவே அங்குச் சென்றுள்ள ராஷ் பிகாரி போசுடன் இணைந்து கொள் வார். எனவே, அவருக்குக் கடவுச் சீட்டு வழங்கக் கூடாது என்று, சென்னை மாகாண அரசு தலைமைச் செயலாளர் குறிப்பு எழுதி, இந்திய அரசின் உள்துறைக்கு விடுத்த விவரம் இன்றும் அப்படியே அக்கோப்பில் உள்ளது.

"பெரியாரியல்" நூலின் 2004-முதல் பதிப்பு முன்னுரையில் வே.ஆனைமுத்து.

## தோழர் வே.ஆனைமுத்து 100




## வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம்

தோழர் வே.ஆனைமுத்து 1980வெளியிட்ட 5 நூல்களுள் "தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி" குறிப்பிடத்தக்கது. 2004இல் வெளியிட்ட "பெரியாரியல்" 2 தொகுதிகள் 258 & 328 பக்கங்கள். பெரியாரியல் என்றால் என்ன என்று அறிய பயனுள்ள நூல்.

திருச்சி வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம்’ என 16 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளது. அவை: 1.அறிவுநெறி அடிக்கற்கள், 2.தமிழ்நாட்டில் பண்பாட்டுப் புரட்சி, 3.இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு மோசடி, 4.விகிதாசார வகுப்புவாரி இடப்பங்கீடு, 5.நாத்திகர் போர்வா, 6.மார்க்சியப் பெரியாரியம், 7.இயக்கம், 8.அரசியல்-தமிழ்நாடு, 9.அரசியல்-இந்தியா, உலகம், 10.தேசிய இன் விடுதலை, 11.ஒடுக்கப்பட்டோர் விடுதலை, 12.தமிழீழ விடுதலை, 13.காலப்பதிவுகள், 14.பெரியாரியல் (பகுதி 1), 15.பெரியாரியல் (பகுதி 2) 16 பெரியார் ஈ.வெ.ரா. பயணக் காலக் கண்ணாடி

# நீதித்துறையில் மேலோங்கும் பிற்போக்கு



- க. முகிலன்

கடந்த பத்தாண்டுகளில் உயர்நீதித்துறை பொதுவாக அரசுக்கு எதிரான தன்மையில் தீர்ப்பு வழங்குவதில்லை. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு 2019ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பாபர் மசூதி பற்றிய தீர்ப்பாகும், பாபர் மசூதியை இடித்தது தண்டனைக்குரிய குற்றம்; பாபர் மசூதி கட்டப்படுவதற்குமுன் அங்கு இராமர் கோயில் இருந்ததற்கான உறுதியான ஆதாரம் இல்லை; ஆனால் இந்துக்களில் பெரும்பாலோர் பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்று நம்புவதால் அந்த இடம் இந்துக்களுக்கு வழங்கப்படுகிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. குறிப்பாக இந்து மதம் தொடர்பான வழக்குகளில் பழமையைப் பாதுகாக்கும் தன்மையிலேயே தீர்ப்புகள் வழங்கப்படும் போக்கு நிலவுகிறது.

கடந்த மே மாத இறுதியில் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்திலும் மதப் பழமை வாதத்தைக் காக்கும் வகையிலான ஒரு தீர்ப்பு அளிக்கப்பட்டது. முசுலீம் இளைஞர் சபி கான், இந்து பெண் சரிகா சென் இருவரும் சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் பதிவுத் திருமணம் செய்து கொள்வதற்குக் காவல் துறையின் பாதுகாப்பு வழங்க வேண்டும் என்று கோரி மத்தியப் பிரதேச உயர்நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் அளித்தனர். அதில், ''நாங்கள் மதம் மாறாமல் திருமணம் செய்து இணைந்து வாழவிரும்புகிறோம். ஆனால் எங்கள் குடும்பத்தினரின் எதிர்ப்பால் எங்களால் திருமணத்தைப் பதிவு செய்ய முடியவில்லை. எனவே, திருமணத்தை முறையாகப் பதிவு செய்வதற்கு எங்களுக்குக் காவல்துறை பாதுகாப்பு வழங்க வேண்டும்'' என்று கேட்டிருந்தனர். இதற்கு உயர்நீதிமன்றத்தில் பெண் வீட்டார் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இருதரப்பையும் விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி அலுவாலியா, ''இசுலாமிய சட்டப்படி முசுலீம் மதத்தைச் சேர்ந்த ஆண், சிலை அல்லது நெருப்பை வழிபடும் பெண்ணைத் திருமணம் செய்வது செல்லாது. சிறப்புத் திருமணச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டாலும் அத்திருமணம் செல்லாததாகவே கருதப்படும். இந்தச் சூழலில், திருமணப் பதிவுக்குக் காவல்துறை பாதுகாப்பு வழங்க எந்த முகாந்திரமும் இல்லை'' என்று கூறி அவர்களின் விண்ணப்பத்தைத் தள்ளுபடிச் செய்தார்.

1954இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் வேறுபட்ட மதத்தினர் இருவர், தங்களுடைய மதம் சார்ந்த திருமணச் சடங்கு முறைகள் வேண்டாம் என்று மறுத்து, பதிவுத் திருமணம் செய்துகொள்வதற்கு வழிவகை செய்வதாகும். உயர்நீதிமன்ற நீதிபதி அலுவாலியா இச்சட்டத்தைப் படிக்கவில்லையா? அல்லது படித்திருந்தும் வேறுபட்ட மதத்தினர்-குறிப்பாக சங்பரிவாரங்கள் எதிர்க்கும் 'லவ்-ஜிகாத்' அடிப்படையில் ஒரு முசுலீம் இளைஞர் இந்துப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதைத் தடுக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் தீர்ப்பளித்தாரா? என்பது தெரியவில்லை. சிறப்புத் திருமணச் சட்டத்தின் செயல்பாட்டில் மதம் சார்ந்த தனிநபர் சட்டம் தலையிடுவதற்கு அதிகாரமே இல்லை. நீதிபதியின் பழமைவாத மனநிலையையே இது காட்டுகிறது. இத்தீர்ப்பை மாற்றாவிட்டால், இது ஒரு தீங்கான எடுத்துக்காட்டாகிவிடும்.

இதேபோன்று அண்மையில் வேறொரு வழக்கில், ஒரு ஆணும் ஒரு பெண்ணும் (இருவரும் இந்துக்கள்) திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்ந்து, பிறகு பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்; பல ஆண்டுகள் கழித்து அப்பெண் மணவிலக்குக் கோரி




நீதிமன்றத்தை நாடினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, தீ வளர்த்து, அதைச்சுற்றி இருவரும் ஏழு தப்படி நடக்காததால் இது இந்த முறைப்படியான திருமணம் அல்ல; திருமணத்தைப் பதிவு செய்திருந்தாலும் இத் திருமணம் செல்லாது; எனவே மணவிலக்கு விண்ணப்பத்தை ஏற்க முடியாது என்று தீர்ப்பளித்தார். இந்துத் திருமணச் சட்டத்தில் தீயைச் சுற்றி ஏழு தப்படி நடக்க வேண்டும் என்பது கட்டாயம் என்பதாக இல்லை.

நீதித்துறை பிற்போக்குத்தனமாகச் செயல்படுவது சனநாயகத்திற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு கேடானதாகும்.

# இந்துப் பண்டிகைப் பண்பாட்டில் சிறைப்பட்டுக் கிடக்கும் பெண்கள் மீட்சிக்கான வழி



ஓவியா

மிக நீண்ட காலமாக பண்டிகைகள் பெண்களைச் சிறைப்படுத்தி வருவதை நான் பல்வேறு கட்டுரைகளில் எழுதியுள்ளேன். மத எதிர்ப்பு சரி என ஒப்புக் கொள்ளும் தோழர்கள் கூட பண்டிகை எதிர்ப்பில் போதுமான கவனம் செலுத்துவதில்லை என்பதே உண்மை.

மற்றொரு புறம் பண்டிகை எதிர்ப்பு என்பது பொது மக்களுக்கும் நமக்குமான உறவை எதிரெதிராக நிறுத்தி விடுவதாக முன் வைத்து பண்டிகைகள் கொண்டாட்டத்தில் நாம் சமரச போக்கையே கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்பவர்களும் கணிசமாக இருக்கிறார்கள். இதெல்லாம் பொம்பிளைங்க சமாச்சாரம், நான் அவர்கள் உரிமையில் தலையிடுவதில்லை என்று தனது பெண்ணுரிமை வீரத்தை பறைசாற்றிக் கொள்வோரும் உண்டு.

குழந்தைகளை இந்தப் படையின் முன்னணி வீரர்களாக நிறுத்தி அவர்களின் மகிழ்ச்சிக்காக என்று நயத்துடன் எடுத்து வைத்து பம்முவோர்களும் ஏராளமுண்டு.

பெரியாரின் போராட்டங்களில் கடவுள் எதிர்ப்பு குறிப்பாக இந்துக் கடவுளர்களின் எதிர்ப்பு முகாமையாக இடம் பெற்றிருப்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். உலகமெங்கும் மக்கள் விடுதலையடைய நாத்திகம் தேவைப்பட்ட போதிலும் இந்தச் சமுதாயத்தில் மக்கள் விடுதலையடைய கடவுள் மறுப்பு, மத எதிர்ப்பு என்பது பன்மடங்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதே பெரியாரின் கணிப்பாகும்.

மதம் இன்று அய்ரோப்பியர்களின் வாழ்வில் வகிக்கும் பாத்திரமும் நமது மக்கள் வாழ்வில் வகிக்கும் பாத்திரமும் ஒன்றல்ல. அவர்கள் செல்லும் பாதையில் ஓர் ஓரத்தில் கடவுளையும் கோவிலையும் வைத்திருக்கிறார்கள். நம்மவர்களோ முதுகில் மூட்டையாக மதத்தையும் மதச் சடங்குகளையும் சுமந்து கொண்டே தான் நடக்கிறார்கள்.

இதில் இந்தப் பண்டிகைகளுக்கும், திருவிழாக்களுக்கும் பெரிய பங்கிருக்கிறது.

இவ்வளவு கல்வி வளர்ந்து விட்டச் சூழலில் இத்தனைப் பெண்கள், அதிலும் இளவயதுப் பெண்கள், இளைஞர்கள் இந்தக் கோவில் விழாக்களில் கொஞ்சம் கூட அறிவுக்கு பொருத்தமில்லாமல் நடைபாதைகளை அடைத்துக் கொண்டு எப்படி நிற்கிறார்கள்? நன்கு கவனித்தால் இவர்களில் பெரும்பாலோர் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள்தான். அந்த இளம் பெண்களும், ஆண்களும் பள்ளிகளில் சரியாகப் படிக்காத மாணவர்களாக இருக்கும் வாய்ப்பே மிக அதிகம்.

பெரும்பாலும் இந்தக் கோவில்கள், அவற்றைச் சார்ந்தும் சுற்றியும் வாழ்கின்ற பகுதிகளில்தான் மாணவர்கள் குறைவான மதிப்பெண் பெறுகிறவர்களாக இருப்பார்கள். யார் வேண்டுமானாலும் இதனை நேரடிக் கள ஆய்வு செய்து தரவு எடுத்து சரிபார்த்துக் கொள்ளட்டும்.

1990களில் எங்கள் அமைப்பான மகளிர் விடுதலை மன்றம் நாகர்கோவில் வடசேரி குன்னுவிளையில் மாலை நேர வகுப்புகள் நடத்தி வந்தது. அவர்களுக்கு பொதுவான சமுதாய இடமொன்று இருந்தது. அதில் எங்களுக்கு இடம் கொடுத்தார்கள். மின் வசதியெல்லாம் செய்து கொடுத்தார்கள். இந்திய விண்வெளி ஆராய்ச்சி மய்யத்தில் பணிபுரிந்த அறிவியலாளர் சென்று பாடம் எடுத்து வந்தார்கள். வாரத்தில் நாலு நாள் ஏதாவதொரு கொண்டாட்டம், பாட்டும் கூத்தும் காதைப் பிளக்கும். ஒரு நாள் அந்த இளைஞர்களை அழைத்து உட்கார வைத்து நீண்ட நேரம் பேசினோம்.

நீங்கள் கொண்டாட்டங்களைக் குறைத்துக் கொள்ளாமல் உங்கள் பிள்ளைகளை எங்களால் படிக்க வைக்க முடியாது என்றோம். அந்த உண்மையை அவர்கள் உணர்ந்தார்கள். அதன்பின் கொண்டாட்டங்கள் குறைந்தன. கிட்டத்தட்ட தேர்ச்சி பெறும் மாணவர்களே இல்லை என்று இருந்த பகுதியில் பெரும்பாலான மாணவர்களைத் தேர்ச்சி பெற வைக்கவும் சில மாணவர்களை நல்ல மதிப்பெண் எடுக்க வைக்கவும் எங்களால் முடிந்தது.

இந்தக் கோவில்கள்தான் இன்று மத அடிப்படையிலான கட்சிகளுக்கு ஆட்களை தயார் செய்து கொடுக்கும் இடங்களாக இருக்கின்றன என்பதை நாம் கூடுதலாகக் கவனிக்க வேண்டும். ஆனால் இந்தக் கோவில்களின் பணி என்ன, அதில் நடக்கும் ஊழல் என்ன என்பதையெல்லாம் எடுத்துப் பேசுகிற அந்தந்தப் பகுதி சார்ந்த பொதுநலத் தொண்டர்கள் இன்று எந்தக் கட்சியிலும் இல்லை.

இந்தக் கோவில்களிலிருந்து ஒருவகையில் இவற்றோடு மறைமுகமாக இணைக்கப்பட்டுள்ள வீடுகளின் பூஜையறை அல்லது சாமி மாடங்களுக்கு வருவோம். கண்ணுக்கு தெரியாத நூல்கள் இவற்றை இணைக்கின்றன; இயக்குகின்றன. இங்கு பெண்கள் விளக்கேற்று வதிலிருந்து, விரதமிருப்பது வரை ஒருமுழுமையான மதவாழ்வுக்குப் பண்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

வெளிநாட்டவரோடு ஒப்பிட்டு மதம் நம் மக்கள் வாழ்வில் வகிக்கும் பாத்திரத்தின் வேறுபாட்டையும் மிகைத் தன்மையையும் சுட்டினோமில்லையா, அதுபோல் ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் வாழ்வின் மதத்தின் பிடி கூடுதலான இறுக்கங்கள் கொண்டதாக இருக்கிறது. பண்டிகைகள் என்பவை பெண்களின் நேரத்தை ஆக்கிரமித்துவிட்ட அடிமை விலங்குகள். ஆனால் அதைப் பாதுகாப்பாக கீழே போடாமல் சுமந்திருப்பதே அவர்களுக்களிக்கப்பட்டிருக்கும் இன்பம், கடமை, வாழ்வின் அர்த்தம் என்றே பெண்கள் நினைக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். பெண்களை வீட்டுச் சிறையிலடைத்துவிட்ட ஆண்

தலைமைக்கான வரலாறு அந்தப் பெண்ணை வீட்டை விட்டு வெளியேறாமல் நிரந்தரமாக தனது அடிமை நிலையை பூஜித்தே வாழ வைப்பதற்கான ஏற்பாடுகள்தான் இந்தப் பண்டிகைகள். இவையெல்லாம் ஏதோ கடந்த காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளல்ல. நிகழ்காலத்திலும் பெண்ணை வீட்டை விட்டு வெளியேறாமல் இருக்க செய்யும் தடுப்பு அரண்கள் தான் இந்தப் பண்டிகைகள்.

தீபாவளிக்கு ஒரு நாள் விடுப்பு ஆண்களுக்கு போதும். பெண்களுக்கு? பலகாரம் செய்ய இரண்டு நாள்; அதைப் பரிமாற பண்டிகை நாள்; பிறகு நோய்க்கு இரண்டு நாள் சில சமயங்களில் ஒரு வாரம் இந்தப் பெண்களால் எப்படி ஒரு தொழிலைக் கற்றுக்கொண்டு முன்னேற முடியும்? உருப்படுமா இந்தப் பெண்கள் வாழ்க்கை?

விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, வரலட்சுமி நோன்பு, கோகுலாஷ்டமி, மகா சிவராத்திரி, இராமநவமி, கார்த்திகை, கௌரி பூஜை, கந்த சஷ்டி விரதம், நாகராஜா பூஜை, வைகுண்ட ஏகாதசி, பிரதோஸம், மகா சங்கராந்தி இந்தப் பட்டியல் இன்னும் நீளும். இவையெல்லாம் போதாது என்று உறவினர்கள் வீட்டு பூப்புனித நீராட்டு விழாக்கள், கல்யாணங்கள், கருமாதிகள் இவையும் முக்கியமாக இந்துக் குடும்பங்களில் ஒருவித பண்டிகைக் கொண்டாட்டங்கள்தான். கல்வி வளர வளர இதெல் லாம் கொஞ்சம் குறையாதா என்று பார்த்தால் கூடிக் கொண்டு போகிறது. இவை அனைத்திலும் பங்கு பெறும் ஒரு பெண் இந்தச் சமுதாயத்தின் உருப்படியான எந்த காரியத்திற்கும் உதவும் தகுதியற்ற வளாகவே வாழ முடியும்.

இந்த சடங்குகள் மற்றும் அது சார்ந்த விதிமுறை களைக் கடைப்பிடித்தொழுக வேண்டியவள் பெண் என்றால் அவளுக்கு வீட்டை விட்டு வெளியேற ஏது நேரம்? மேலும் அவர்களைப் பொறுத்தவரை ஆண்கள் வெளியில் சென்று பொருளீட்டிக் கொண்டு வந்தால் இத்தனை பண்டிகைகளையும் கொண்டாடி வாழ்வதை விட்டு விட்டு பேருந்தில் இடிபட்டு உதை பட்டு வேலைக்கு போய் அவ்வளவு துன்பங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கிறது? படித்த பெண்கள் கூட கூச்சமில்லாமல் வீட்டிலிருப்பதைப் பெருமை யுடன் ஏற்றுக்கொள்ள இதுவே காரணம்.

இந்தப் பண்டிகைகளை எதிர்க்கத் துணியாத எவரொருவரும் முற்போக்குவாதி என அடையாளப்படுத்த முடியாதவர் என்பதே நமது துணிவான முடிவாகும். ஆனால் இன்று இங்கு மிகப்பெரிய குழப்பத்திலிருப்பது முற்போக்கு முகங்களே யாகும். முற்போக்காக இருக்க வேண்டும் என்கின்ற இலக் கோடு தயாரிக்கப்பட்ட ஒரு தொலைக்காட்சித் தொடரில் பள்ளிப் பருவத்தில் பருவமைடைந்துவிடும் ஒரு பெண்ணுக்கு ஆண்களை எதிர்த்துக் கொண்டு பெண்கள் தனித்து நின்று அத்தனை ஆடம்பரங்களோடும் சடங்குகளோடும் நடத் தப்படும் சடங்கு நிகழ்ச்சி பெண்ணுரிமை என்று காட்டப்படுகிறது.

சடங்கு என்பதே பெண்ணுக்கு எதிரான விலங்கு என்கின்ற சிந்தனையிலிருந்து நாம் எவ்வளவு தொலைவிலிருக் கிறோம்?



**புரட்சிகரப் பெண்கள்**

பண்டிகைகள் பெண்ணடிமைத்தனத்தில் வகிக்கும் அடிப்படையான நுட்பமான பாத்திரத்தை புரிந்துகொண்டு அதனை மறுத்துத் தனது பயணத்தைத் தொடங்கும் பெண்தான் இங்கு புரட்சிகரமான பெண் என்கின்ற பாத்திரத்தை வகிக்க இயலும். எனவேதான் தலைவர் பெரியார் கீழ்க்காணும் கட்டளைகளைப் பெண்களுக்கு வைத்தார்

"பெண்களே பூ பொட்டு வைக்காதீர்கள்
கோவிலுக்கு போகாதீர்கள்
இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடதீர்கள்"

எந்த மதத்தையும் ஏற்றுக்கொள்ளாதே என்பதுடன் மத எதிர்ப்பாளராய் மட்டுமே ஒரு பகுத்தறிவாளர் சுயமரியாதைக் காரர் வாழவேண்டும் என்பதே பெரியார் கொள்கை. அவ்வாறி ருக்க ஏன் இந்து மதப் பண்டிகைகளைக் குறிப்பிட்டு பெரியார் எழுத வேண்டும்?

இதன் பொருள் கிறிஸ்துமஸ் கொண்டாடுங்கள், பக்ரீத் கொண்டாடுங்கள் என்பதல்ல. பெரியார் தொண்டர்கள் எந்த மதப் பண்டிகைக்கும் வாழ்த்துகூட சொல்ல மாட்டார்கள். ஆனால் இந்து மதப் பண்டிகைகள் மனித உடம்பின் நரம்பு மண்டலங்கள் போல் வாழ்க்கை முழுவதிலும் வியாபித்து செயற்படுகின்றன. மற்ற மதப் பண்டிகைகள் அவர்களை ஒரு மதமாக ஒருங்கிணைக்க மட்டுமே பெரிதும் பயன்படு கின்றன.

இந்து மதப் பண்டிகைகளோ ஆண்களையும் பெண்களை யும் பிரிக்கப் பயன்படுகின்றன. பெண்கள் இருக்கும் அத்தனை விரதங்களும் தசரா பண்டிகை விரதம் உட்பட சகோதரர்கள் கணவர்கள் என்று ஆண்கள் நலமுடன் வாழப் பெண்கள் இருக்கும் விரதங்கள்தான். இதுபோல் மனைவியை விடுங்கள் தன் தாய் நலத்துக்கான ஒரு விரதம் கூட ஆணுக்கு இந்த மதம் ஏற்படுத்தவில்லையே அது ஏன்?

இப்படி அனைத்து வகைகளிலும் நமது முன்னேற்றத்தைத் தடுக்கின்ற நம்மை தாழ்வுபடுத்துகிற பண்டிகைகளை, புதுத்துணி கிடைக்கிறது விருந்து கிடைக்கிறது; இதில் எங் களுக்கு மகிழ்ச்சி கிடைக்கிறது என்பதாகக் கருதும் பெண்களின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்தது என்பதைப் பெண்கள் என்று உணர்வார்கள்? பெண்களே நீங்கள் பண்டிகைகளில் மகிழ்ச்சியைத் தேடாதீர்கள். அது ஒரு பொய்யானது. பெரியார் சொன்ன சுய மரியாதையைத் தேடுங்கள். அதுவே தீர்வு.

# “ஆற்றங்கரை நாகரிகங்களில் தமிழ் பண்பாடு”

## நூல் அறிமுக விழா



திராவிடப் பேரொளி தாத்தா அயோத்திதாசர் பண்டிதர் நினைவாக திராவிட இயக்கத்தின் இமயம், தி.மு.க. பேராசிரியர் பெருந்தகை அன்பழகன் அவர்கள் நினைவு மேடை அமைக்கப்பட்டு தோழர் புதுவை சிவ. இளங்கோ அவர்கள் எழுதி. திராவிட மாடல்-தமிழக அரசால் சிறந்த நூலுக்கான விருது பெற்ற “ஆற்றங்கள் நாகரிகங்களில் தமிழ் பண்பாடு” நூல் அறிமுக விழா புதுச்சேரி, உருளையன்பேட்டை திராவிடர் விடுதலைக் கழகம் தோழமை ஒன்றுகூடல் அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் திராவிட இயக்க ஆய்வாளர் தோழர் வாலாசா வல்லவன் நூல் அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார்.

கடலூர் மாவட்டம், விடுதலை சிறுத்தைகள் கட்சி வழக்குரைஞர் தோழர் தி.ச. திருமார்பன், பேராசிரியர் அன்பழகன் படத்தைத் திறந்து வைத்து தொடக்க உரையாற்றினார். தலித் மக்கள் பாதுகாப்பு இயக்கத் தோழர் பிரகாஷ் பிரவீனா, தாத்தா அயோத்திதாசர் பண்டிதர் படத்தைத் திறந்து வைத்து சிறப்பித்தார்.

பெரியார் பிஞ்சு தோழர் திராவிட மகிழன் அவர்கள் பாடலோடு நிகழ்ச்சி தொடங்கியது.

அய்யா சிவ இளங்கோ குடும்பத்தினர் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று நூல் பெற்று சிறப்பித்தனர். கடலூர் தமிழ்ச் சங்கம் தலைவர் பேராசிரியர் குழந்தைவேலனார் நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தார்.

பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர்கள் சு.கருணாமூர்த்தி, ப.பசுபதி, ர.சுபாஷ், கு.சபரி ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தனர்.

தோழர் ப.சந்திரன், தலைமை வகித்தார். பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர் ஆனந்தி முன்னிலை வகித்தார். அண்ணா பேரவை தோழர் இளகோவலன் வரவேற்புரையாற்றினார். அண்ணா பேரவை தலைவர் நூலாசிரியர் தோழர் சிவஇளங்கோ ஏற்புரை நிகழ்த்தினார். பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தீனா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்தார். அரங்கம் நிறைந்த தோழர்கள், திராவிட இயக்கம் சார்ந்த ஆய்வுரை என நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடை பெற்றது.

## கால்டுவெல், காரல் மார்க்சு, பாரதிதாசன் பிறந்தநாள் விழா




திராவிட இயக்கத் தமிழர் பேரவை, 04.05.2024 அன்று சென்னை, தேனாம்பேட்டையில் கால்டுவெல், காரல் மார்க்சு, பாரதிதாசன் ஆகிய மூவர் பிறந்தநாள் விழாவை சிறப்பாக நடத்தியது. இரா.உமா தலைமையில் ப.எட்வின் வரவேற்புரையைத் தொடர்ந்து வாலாசா வல்லவன், சிந்தன், தமிழ் கா.அமுதரசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கார்த்தி நிகழ்வைத் தொகுத்தார். திராவிட மணி நன்றியுரை கூறினார். பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசு ஆகியோர் அழைப்பை ஏற்று நிகழ்விற்கு வந்திருந்தோர் அரங்கில் நிறைந்திருந்தனர்.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441